பக்கங்கள்: 12

விலை: 20 ரூபா

காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 11 சனிக்கிழமை 25.05.2019 கதிர் 201

இனிது ரகசியம் அல்ல!

வடக்கு மக்களைப் பொறுத்த வரை மிக முக்கியமான மூன்று வழக்குகள் அடுத்து வரும் நாள் களில் அல்லது வாரங்களில் கொழும்பில் உயர்நீதிமன்றதுக் கும், மேன்முறையீட்டு நீதிமன் றத்துக்கும் வரவிருக்கின்றன.

முதல் வழக்கு – பக்கம் 02

ஞானசாரரை மன்னிக்க முடியுமாயின் தமிழர்களை ஏன் விடுவிக்கமுடியாது?

மாவை எம்.பி. நேற்று சபையில் காட்டமான கேள்வி

பயங்கரவாதச் சட்டத்தை நீக்குமாறும் கோரிக்கை

கொழும்பு, மே 25

ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யமுடியு மாயின் பயங்கரவாதத் தடைச் சட்டத் தின்கீழ்கைதாகிதடுத்துவைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கானதமிழ்இளைஞர்களை ஏன் விடுதலை செய்யமுடியாது? – இவ்வாறு கேள்வியெழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்ட

பக்கம் 11

அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக கூட்டமைப்பின் எம்.பிக்கள் வாக்கு!

ஆயினும் அது 14 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

கொழும்பு, மே 25

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை தமிழ்க் கூட்டமைப் பின் எதிர்ப்புக்கு மத்தியில் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதரவாக 22 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதற்கமைய, அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை 14 மேலதிக வாக்குகளினால் சபையில் நிறைவேற்றப்பட்டது.

பக்கம் 11

கேப்பாபுலவு முகாமுக்குள் புகுந்த இரண்டு முதலைகள்!

முல்லைத்தீவு, மே 25

கேப்பாபுலவு படைமுகாமுக்குள் இருந்து இரண்டு முதலைகளை வன ஜீவராசிகள் திணைக்

பக்கம் 11

வன்முறை புரிந்த யாழ்.இளைஞர்கள் பலர் நல்ல பிரஜைகளாக திருந்தி வாழ்கின்றனர்

வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் பெருமிதம்

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த ஆவா குழுவைச் சேர்ந்த இளைஞர்கள் தற் போது திருந்தி சமூகத்தில் நல்ல பிரஜை களாக வாழ்ந்து வருகின்றனர். அந்தப் பெருமையுடன் வடக்கில் இருந்து செல் கின்றேன் என

பக்கம் 11

ஈஸ்டர் தாக்குதல் சந்தேக நபர்களின் வங்கி வைப்புக்களில் ரூபா 13 கோடி

41 கணக்குகள் முடக்கப்பட்டன

கொழும்பு, மே 25

நாட்டில் ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங் கரவாதத்தாக்குதல்களுடன் தொடர்புடைய 13 கோடி 40 இலட்சம்ரூபாவைப்புக் களைக்கொண்ட41வங்கிக் கணக்குகள்

பக்கம் 11

யாழ்ப்பாணத்தில் ராணுவக் கெடுபிடியை உடன் குறைக்க உத்தரவிட்டார் மைத்திரி

டக்ளஸ் எம்.பியின் கோரிக்கையை ஏற்று

கொழும்பு, மே 25

யாழ்ப்பாணத்தில் படையினரின் கெடுபிடிகள் அதி கரித்துவருவதுதொடர்பில்நேற்றுஜனாதிபதிசெயலகத்தில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபை

பக்கம் 11

தீவிரவாத அமைப்புக்களுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்!

நீர்கொழும்பில் முஸ்லிம்கள் திரண்டனர்

கொழும்பு, மே 25

உயிர்த்தஞாயிறுத்தாக்குதலைநடத்தியஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக நேற்று ஜும்மா தொழுகையின் பின்னர் நீர்கொழும்பில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பக்கம் 11

பாதுகாப்பு எச்சரிக்கையை விரைவாகத் தளர்த்துங்கள்!

தூதுவர்களிடம் ரணில் மன்றாட்டம்

கொழும்பு, மே 25

இலங்கை மீதான பாதுகாப்பு எச்சரிக்கையைத் தளர்த்துமாறு இலங்கையில் உள்ள

பக்கம் 11

சுவிஸ்குமாரை விடுவித்த குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரிகள் மீது குற்றப்பத்திரம்

சட்டமா அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 25

புங்குடுதீவு மாணவி கொலைவழக்கின்முக்கிய சூத்திரதாரியான சுவிஸ் குமாரை விடுவித்து உத வியை

பக்கம் 11

முதுகெலும்பற்றது எம் அரசு!

ஆளுங்கட்சி எம்.பி. மரிக்கார் சீற்றம்

கொழும்பு, மே 25

தீவிரவாத ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாத முதுகெலும்பில்லாத அரசே எமது அரசு.

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார் ஆளுங்கட்சியின் எம்.பி. மரிக்கார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

மகப்பேற்றுக் கட்டுப்பாட்டை சிசேரியன் மூலம் செய்த மருத்துவர் ஒருவர் குறித்து

பக்கம் 11

காலைக்கதிர் Kalaikathir

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை நம்பமுடியாது

உறவுகள் மீண்டும் எதிர்ப்பு

கிளிநொச்சி. மே 25

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தைதாம் நம்பவில்லை என காணாமால் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களில் அதிகளவான சாட்சிகளைக் கொண்ட ஒருவர் குறித்து விசாரித்து நல்ல தீர்வைத் தந்தால் இந்த அலுவலகத்தை தாம் நம்புவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு கூறினர்.

இதன்போது வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் செயலாளர் லீலாவதி ஆனந்தநடராஜா ஊடகங்களுக்கு தெரிவித்தவை வருமாறு:–

கடந்த 16ஆம் திகதி கொழும்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. இது குறித்து கொழும்புக்கு சென்று அந்த அலுவலக அதிகாரிகளைச் சந்தித்து எமது ஆட்சேபனையைத் தெரிவித்தோம்.

அவர்களிடம் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலகத்தை நாம் நம்பவில்லை எனக் குறிப்பிட்டோம்.

ஆனால், இந்த அலுவலகத்தின் ஊடாக வடக்கு – கிழக்கில் வலிந்து காணாமல் செய்யப்பட்டவர்கள் குறித்து அதிகளவான சாட்சிகளைக் கொண்ட

ஒருவர் சார்பில் வழக்கு ஒன்றை மேற்கொண்டு, அதன் ஊடாக நல்ல தீர்வொன்றைப் பெற்றுத் தந்தால் நாம் அந்த அலுவலகத்தை நம்புவோம் என்று அவர்களிடம் தெரிவித்தோம். விரைவில் அவ்வாறான நடவடிக்கை ஒன்றை எடுப்பதாக அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து அமைச்சர் மனோ கணேசனைச் சந்தித்தோம். அவரிடம் இரகசிய முகாம்கள் இருப்பது குறித்து தெரிவித்தோம். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு மாதாந்தம் 6000 ரூபா வழங்குவது என்பது போராட்டத்தை பலவீனப்படுத்தும் செயல் எனவும், அதனை கட்டாயமாக வழங்கக் கூடாது என நாம் வலியுறுத்தினோம். அந்தப் பணத்தைக் கட்டாயப்படுத்தி வழங்கமாட்டோம் என அமைச்சர் இதன்போது வாக்குறுதியளித்தார் – என்றார். (ஐ)

யாழ். மாவட்டத்தில் மட்டும் வீடற்ற நிலையில் 25,000 பேர்!

யாழ்ப்பாணம், மே 25

யாழ்.மாவட்டத்தில் 25 ஆயிரத்து 761 பேருக்குக் காணிகள் இருந்தும் இதுவரை வீடுகள் இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர் என யாழ்.மாவட்ட செயலகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் வீடுகளின் தேவை அதிகமாக உள் ளது. அதில் மீள்குடியேறிய மக்களுக்கு வீடுகள் முன்னுரிமை அடிப்படையில் அமைத்துக் கொடுக்கப்படவேண்டிய தேவை உள்ளது.

அவர்களுக்கு தற்போது 10 இலட்ச ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின் றன. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயி ரத்து 693 பேருக்கு வீடுகள் தேவையாக உள்ளன. யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்குள் அதி கூடிய தேவை உடைய தொகை இதுவாகும். நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 113 பேருக்கு வீடுகள் தேவையாக உள்ளன. இது குறைந்தளவு தொகையாகும். நிதி மூலங்கள் கிடைக்கும் பட்சத்தில் வீடு இல்லாத வர்களுக்கு வீடுகள் அமைத்து கொடுக்கும் பணிகளை முன் னெடுக்க முடியும்.

யாழ்.மாவட்டத்தில் வீடுகள், காணிகள் இல்லாமல் அதிகளவானோர் வாழ்கின்றனர். அதில் காணிகள் இருந்தும் வீடுகள் இல்லாதோர் தொகை அதிகமாக உள்ளது என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

அதிகாரியை முன்னிலையாகுமாறு அறிவித்தல் கிடைக்கவேயில்லை!

சாவகச்சேரி நீதிமன்றில் ராணுவம் சாட்டுப்போக்கு வழக்கு விசாணைகள் ஓகஸ்ட் வரை ஒத்திவைப்பு

நாவற்குழி இராணுவ முகாம் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 3 இளைஞர்கள் தொடர்பான ஆள் கொணர்வு மனுக்கள் தொடர்பிலான சாவகச்சேரி நீதிவானின் விசாரணைகள் வரும் ஓகஸ்ட் முதலாம் இரண்டாம் திகதிகளில் இடம்பெறும் என்று திகதியிடப்பட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான் ஜெகநாதன் கஜந்திபாலன் முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை இந்த வழக்குவிசாரணைக்கு வந்த போது, வழக்குகளின் முதலாவது பிரதிவாதியான இராணுவ அதிகாரி துமிந்தகெப்பிட்டிவலான, இரண்டாவது பிரதிவாதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க மற்றும் சட்டமா அதிபர் மன்றில் முன்னிலையாகவில்லை.

நேற்றையதினம் மன்றில் முன்னிலையாகுமாறு பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் கிடைக்கவில்லை என்று இராணுவம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கூறினார்.

மேல்நீதிமன்ற நீதிபதியால் எனக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல் கடிதத்தில் பிரதிவாதிகளை இன்று(நேற்று) இந்த மன்றில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று நீதிவான் எடுத்துரைத்தார்.

மேல் நீதிமன்றம் வழங்கிய கட்டளையில், பிரதிவாதிகளை இன்று(நேற்று) சாவகச்சேரி நீதிமன்றில் முன்னலையாகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மன்றின் அறிவுறுத்தலை ஏற்று அதனைப் பிரதிவாதிகளிடம் சேர்ப்பிப்பதாகவும் உறுதி செய்வதாகவும் இராணுவச் சட்டத்தரணி மேல் நீதிமன்றில் அன்றைய தினம் கூறியிருந்தார். ஆனால் இன்று (நேற்று) பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் கிடைக்கவில்லை என்று அவர்களது சட்டத்தரணி குறிப்பிடுகிறார் என்று மனுதாரர்களின் சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் கூறினார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று, பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்பும் ஆவணங்களை மனுதாரர்களின் சட்டத்தரணியை மன்றில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியது.

இந்த மனுக்களில் முதலாம் பிரதிவாதியான இராணுவ அதிகாரி துமிந்த கெப்பிட்டிவலான மற்றும் மூன்றாம் பிரதிவாதி சட்டமா அதிபர் ஆகியோர் சார்பில் முன்னிலையாகும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் செய்த்திய குணசேகர வெளிநாடு ஒன்றில் இடம் பெறும் கருத்தமர்வுக்குச் சென்றுள்ளமையால், அவர் இந்த மன்றில் முன்னிலையாக வசதியாக வழக்குவிசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம், இரண்டாம் திகதிகளில்ஒத்திவைக்குமாறுஇராணுவம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி விண்ணப்பம் செய்தார்.

இந்த மனுக்கள் மீதான விசாரணைகளை துரிதமாக முடிக்க மனுதாரர்கள் எதிர்பார்க்கின்றனர். அதனால் 4 வாரங்களில் அடுத்த தவணையைமன்றுவழங்கவேண்டும் என்று மனுதாரர்களின் சட்டத்தரணி கூறினார்.

இருதரப்புவிண்ணப்பங்களையும் ஆராய்ந்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் ஜெகநாதன் கஜந்திபாலன், மனுக்கள் மீதான விசாரணையை வரும் ஓகஸ்ட் முதலாம் இரண்டாம் திகதிகளுக்கு ஒத்திவைத்தார். (ஐ)

காத்தான்குடி பாடசாலைகளுக்கு ஹிஸ்புல்லா குடும்பத்தின் பெயர்

ஆசு மாரசிங்க எம்.பி. அதிர்ச்சித் தகவல்

காத்தான்குடியில் நிர்மாணிக்கப்படும் புதிய பாடசாலைகளுக்கு ஹிஸ்புல்லா குடும்பத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கல்வி சம்பந்தமான மேற்பார்வைக் குழுவின் பரிசோதனைகளின் மூலம் இது தெரியவந்துள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று கல்வி வலயங்கள் இருக்கின்றன . அவற்றில் காத்தான்குடி கல்வி வலயத்தில் புதிதாக 5 பாடசாலைகள் உட்பட மொத்தம் 8 பாடசாலைகள் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்தப் பாடசாலைகள் அனைத்துக்கும் ஹிஸ்புல்லா குடும்பத்தின் பெயர்களே சூட்டப்பட்டுள்ளன. அந்தப் பாடசாலைகளை நிர்மாணிப்பதற்கான நிதியும் சட்டவிரோதமாகவே கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்பது நாடாளுமன்றக் கல்வி சம்பந்தமான மேற்பார்வைக் குழுவின் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது – என்றார். (ஐ)

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியிலிருந்து கேட்டுக்கேள்வியின்றிப் பதவி நீக்கியமையை ஆட்சேபித்து பேராசிரியர் இரட்ணம் விக்கினேஸ்வரன் தாக்கல்செய்த அடிப்படை உரிமைமீறல் மனு.

பெரும்பாலும் நாளை மறுதினம்திங்கட்கிழமை அது உயர்நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாரேனும்ஒருவரைத்தண்டிக்கும் அல்லது பாதிக்கும் விதத்தில்குற்றத்தண்டனைநடவடிக்கை எடுப்பதாயின் குறைந்தபட்சம் அது குறித்து அவரின் விளக்கத்தை சம்பந்தப்பட்ட தரப்பு கேட்டிருக்க வேண்டும். அதன் பின்னரே தண்டனை குறித்துத் தீர்மானிக்க வேண்டும். அப்படி விளக்கத்தைக்கேட்காமல் – செவிமடுக்காமல் – அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது இயற்கை நீதி முறைமையையே மீறும் செயற்பாடு என்றே நீதிமன்றங்கள் கருதி வந்துள்ளன. அந்த வகையில்பேராசிரியர் விக்னேஸ்வரன், அவரைப் பதவியிலிருந்து தூக்கும் அளவுக்கு ஏதும் தவறி ழைத்திருப்பாராயின் அது குறித்துக் குறைந்தபட்சம் அவருக்கு அறிவித்து, அவரது விளக்கத்தைப் பெற்றுக் கொண்டபின் அவரைப் பதவி நீக்கியிருந்தாலாவது அது ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதாக இருந்திருக்கும். ஆனால், இந்த விடயத்தில் விக்னேஸ்வரனின் விளக்கம் ஏதும் கேட்காமலேயேதம்பாட்டில்ஜனாதிபதியோ, பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவோ நடவடிக்கை எடுத்திருந்தால் அது இயற்கை நீதிக்கு முரணான செயல் என்று நீதிமன்றம்தீர்மானிக்கஅதிகவாய்ப்புண்டு.

நாளை மறுதினம் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும்போது, அதைத் தொடர்ந்து விசாரணைக்கு ஏற்பதற்குஉயர்நீதிமன்றம் இணங்குமானால், அதன் பின்னர் இந்த வழக்கு விக்னேஸ்வரனுக்கு ஆதரவாகத்திரும்பஅதிகவாய்ப்பு உண்டு என்று சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன. இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்க வைப்பது தான் முதல் இக்கட்டாக இருக்கும், அதைத்தாண்டினால், திரும்பவும் பேராசிரியர் விக்னேஸ்வரன் துணைவேந்தர் கதிரையில்வந்து அமர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதுதான் சட்ட வட்டாரங்களின் கருத்து.

அடுத்த வழக்கு – தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் யாழ் மாநகரசபை உறுப்பினராக வி. மணிவண்ணன் செயலாற்றுவதற்கு எதிராகத்தாக்கல் செய்யப்பட்டது. ஏற்கனவே, இவ்வழக்குத் தொடர்பில் மணிவண்ணனுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு இருப்பது தெரிந்ததே. இந்த வழக்கின் மீதான விசாரணைகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முடிந்துவிட்டன. இருதரப்புகளும் மேலதிக எழுத்துமூல வாதங்களை முன்வைப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் அடுத்த மாத நடுப்பகுதியில் இந்த வழக்கின் தீர்ப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வழக்கில் தங்கள் கோரிக்கை நிச்சயம் நீதிமன்றத்தினால் ஏற்று அங்கீகரிக்கப்படும் என உறுதியாக நம்புகின்றன – அடித்துக் கூறுகின்றன – மணிவண்ணனுக்கு எதிரான மனுதாரர் தரப்பு. இரண்டு, மூன்று வாரங்களில் முடிவு வந்துவிடும்தானே. அதுவரை பொறுத்திருப்போம்.

மூன்றாவது வழக்கு – வடக்கு மாகாணசபைஅமைச்சர்பதவியில் இருந்துதம்மை நீக்கியமுறைமை தவறானது எனத் தெரிவித்து பா.டெனீஸ்வரன், முன்னைய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் மற்றும் இருவருக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கு.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதாயினும், உரிய நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தின்முன் அது வராததால், வழக்கு இம்மாத இறுதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மாத இறுதியில் உரிய ஆயத்தின் முன் இந்த வழக்குக்கான விசாரணைத் திகதிகள் தீர்மானிக்கப்படும். அந்தவிசாரணையின் முடிவில், இந்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலஉத்தரவுப்படிடெனீஸ்வரனுக்கு அமைச்சுப் பதவியை மீள உடன் வழங்காமல் நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்து, நீதிமன்றை அவமதித்தனர் என்று முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன்உட்படமூவருக்கு எதிராக நடை பெற்ற நீதிமன்ற அவமதிப்புக்குற்றவிசாரணையின் தீர்ப்பும் சேர்த்து வழங்கப்பட இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த வழக்குத் தொடர்பாக ஏற்கனவே சில தடவைகள் இப்பத்தியில் நான் சுட்டிக்காட்டிய ஒரு வசனத்தை மீள நினைவூட்டல்பொருத்தமானது எனநினைக்கிறேன்.

"காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது!"

- மின்னல் -

கொழும்பில் 50,000 சேரி வீடுகளை அகற்ற அமைச்சரவை அங்கீகாரம்!

கொழும்பு, மே 25

கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் 50,000 குடிசைகளில் வாழும் குடும்பங்களை அகற்றி, வேறிடத்தில் குடியமர்த்தும் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவர்கள் அகற்றப்படுகின்றமை மூலம் 400 ஏக்கர் காணியைப் பெற்று, வர்த்தகமற்றும் பொதுத் தேவைகளுக்குப் பயன்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

மாளிகாவத்தை ரயில் திணைக்களக் காணி, கெத்தாராம அப்பிள்வாட், புளூமண்டல் மற்றும் இரத்மலானை நீர்ப்பாசனத்திணைக்களகாணிகளில் குடியிருக்கும் குடும்பங்களே இந்தத் திட்டத்தின் கீழ் அகற்றப்படவுள்ளன.

குடும்பங்களை அகற்ற 17000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அகற்றப்படும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 30 இலட்சம் ரூபா பெறுமதியான வீடு வழங்கப்படும்.

பெருநகர, மேற்கு அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க இந்த திட்டத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

மியன்மாரில் மறைந்திருந்த இலங்கைப் பிரஜை கைது!

கொழும்பு, மே 25

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுடன் நெருங்கிய தொடர்புடையவர் எனக் கருதப்படும் இலங்கைப் பிரஜை ஒருவர் மியன்மாரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் சுற்றுலா விஸாவில் மியன்மாருக்கு சென்று, விஸா காலம் முடிந்த பின்னரும் அங்கு தங்கியிருந்த இலங்கையரான ஏ.எஸ்.இர்ஸாத் மொஹமட் என்பவரே கைதாகியுள்ளார்.

இலங்கையில் தேடப்படும் சந்தேகநபர்கள் பற்றிய விவரத்தை வெளிவிவகார அமைச்சு, மியன்மார் அரசுக்குக் கையளித்திருந்தது. இதன்படி தனது விஸா காலத்தை நீடிக்கக் குடிவரவு அலுவலகத்துக்கு சென்ற இர்ஸாத் கைதானார்.

அவர் இலங்கைப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ரணில் இருக்கும்வரை நல்லாட்சி நிலைக்கும்!

அடித்துக் கூறுகிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, மே 25

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருக்கும் வரை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசை எவராலும் கவிழ்க்க முடியாது என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஆட்சியைப் பொறுப்பேற்றதில் இருந்து இயற்கை அனர்த்தம், அரசுக்கு எதிரான சூழ்ச்சிகள், குண்டுத்தாக்குதல் என அனைத்துச் சவால்களையும் எதிர்கொண்டோம். இவற்றைக் காரணங்காட்டி எங்களால் எதையும் செய்யாமல் இருந்திருக்க முடியும். ஆனால் அபிவிருத்திப் பணிகளை நாங்கள் ஒருபோதும் இடைநிறுத்தப் போவதில்லை.

மஹிந்த காலத்தில் தற்போதுள்ள எந்தச் சுதந்திரமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. கடந்த அரசு அபிவிருத்தியின் பேரைக்கொண்டு மக்களின் பணத்தைச் சூறையாடினார்களோ என்று சந்தேகம் ஏற்படுகின்றது. ஆனால் நாங்கள் மக்களின் பணத்தை சூறையாடிப் பிரச்சினையை ஏற்படுத்தப் போவதில்லை.

1977 தொடக்கம் 1994 ஆண்டு வரையில் செய்த வேலைத்திட்டங்களே 2015 ஆம் ஆண்டுவரை நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தன. இன்று அனைவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் குறை கூறுகின்றனர். ஆனால் பிரதமரின் ஆலோசனைகளின் காரணமாகவே இந்த அபிவிருத்திப் பணிகளுக்கான நிதி முறையாகக் கிடைக்கப் பெறுகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரை இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. அதனை கடந்த வருடம் மூண்ட அரசியல் நெருக்கடியின்போது நிரூபித்துக் காட்டியிருந்தோம்.

கடந்த அரசால் ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடாவடிகள் தொடர்பான விசாரணைகளும் தற்போது இடம்பெற்று வருகின்றன. வெள்ளை வான் கடத்தல் கலாசாரத்தைக் கொண்ட ஆட்சியில் மஹிந்த சர்வாதிகாரப் பிரிவினரின் செயற்பாடுகளின் காரணமாகவே சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன அந்தக் கட்சியை விட்டு வெளியேறினார். ஆனால் மீண்டும் குடும்ப ஆட்சிக்கு இடமளிக்கப் போவதில்லை – என்றார். (ஐ)

வறட்சியினால் 49,381 பேர் யாழ்ப்பாணத்தில் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் 14,809 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 38 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலக பிரிவுகளில் எட்டு பிரதேச செயலக பிரிவுகளில் இந்தப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும், இவர்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை மாவட்ட இடர் முகாமைத் துவம் நிலையம் விநியோகித்து வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் 1031 குடும்பங்களும், வேலணையில் 2,798 குடும்பங்களும். புங்குடுதீவில் 2422 குடும்பங்களும், காரைநகரில் 2760 குடும்பங்களும், சண்டிலிப்பாயில் 1041 குடும்பங்களும், சாவகச்சேரியில் 3361 குடும்பங்களும், கரவெட்டியில் 336 குடும்பங்களும், மருதங்கேணியில் 1060 குடும்பங்கும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன என யாழ் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (ஐ)

கொக்கிளாயில் கிராம சேவையாளரை அச்சுறுத்திய சிங்கள இளைஞன் கைது!

முல்லைத்தீவு, மே 25

கொக்கிளாய் மேற்குப் பகுதியில் கிராம சேவையாளரை அச்சுறுத்தியமை மற்றும் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில், கொக்கிளாய் பகுதியைச் சேர்ந்த சிங்கள இளைஞன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட கொக்கிளாய் மேற்கு 77 ஆம் இலக்க கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராம அலுவலகரைக் கொக்கிளாய் பகுதியைச் சேர்ந்த சிங்கள இளைஞர் ஒருவர் அச்சுறுத்தியுள்ளதுடன் அவரின் மோட்டார் சைக்கிளின் சாவியைப் பறித்துக் கொண்டு அவரின் சட்டையைப் பிடித்து இழுத்துள்ளார். இந்நிலையில் அன்றே இந்தச் சம்பவம் குறித்து முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து கடந்த 19 ஆம் திகதி வரை முல்லைத்தீவுப் பொலிஸார் நடவடிக்கை எடுக்காத நிலையில் கிராம சேவகர்களின் அழுத்தம் காரணமாகக் கிராம சேவகருக்கு அச்சுறுத்தல் விடுத்த சிங்கள இளைஞரைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட கிராம சேவகர்களை அழைத்த முல்லைத்தீவுப் பொலிஸார் இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட வேளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கிராம அலுவலகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து கைதுசெய்த இளைஞரை விடுவிக்கக்கோரி கடந்த புதன்கிழமை கொக்கிளாய் பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கதைத்துள்ளனர்.

இருந்தும் பொலிஸார் அரச உத்தியோகத்தருக்கு இடையூறுவிளைவித்த காரணத்தால் கைதுசெய்யப்பட்ட நபரை நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

அரச உத்தியோகாத்தருக்கு இடையூறுவிளைவித்த குற்றச்சாட்டில் அந்த நபரை எதிர்வரும் 03 ஆம் திகதி வரை விளக்கமறியவில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

ஞானசாரரை விடுவித்தமைக்குப் பாராட்டு பொதுபலசேனாவின் பணிகளுக்குப் புகழாரம்

இலங்கை சிவசேனை சார்பில் மறவன்புலவு சச்சி தெரிவிப்பு

வண. ஞானசார தேரரை மன்னித்து விடுவித்தமைக்காக இலங்கை அரசுக்கு இலங்கை சிவசேனை அமைப்பு பாராட்டு தெரிவித்திருக்கிறது.

இதுதொடர்பில் அந்த அமைப்பின் சார்பில் மறவன்புலவு க. சச்சிதானந்தன. விடுத்துள்ள அறிக்கையில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அண்மையில் வந்தேறிய சமயங்களான கிறித்துவம், முகமதியம் இரண்டும் இலங்கையின் நெடுங்கால பாரம்பரியத்தைப் பேணுகின்ற சமயங்களான புத்தத்தையும் சைவத்தையும்தாக்கிமதமாற்றும் நோக்கம் கொண்டிருப்பன.

வந்தேறிச் சமயங்களான கிறித்துவம்,முகமதியம் இரண்டிலிருந்து புத்த தேசியத்தை காக்க வேண்டும் என்ற முனைப்போடு செயற்பட்டவர் வணக்கத்துக்குரிய ஞானசார தேரர்.

நோக்கத்தில் தூய்மையாகச் செயற்பட்ட அப்பெருமகனார் சினந்து சொன்ன சொற்கள் இலங்கையின் சட்டங்களுக்குப் புறம்பானவை என நீதிமன்றம் கண்டறிந்ததால் அவர் சிலகாலம் சிறையில் இருக்க நேரிட்டது.

அவர் வெளியே வந்திருக்கிறார். மீண்டும் தன் பணியைத் தொடர்கிறார் என்பதில் சைவர்களாகிய நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பாக வண. ஞானசார தேரரை மன்னித்து விடுவித்த இலங்கை அரசுக்குப் பாராட்டுகளைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

பொதுபலசேனையும் அதன் தலைவர் வண. ஞானசார தேரரும் அவரோடு இணைந்து கைகோர்த்துப் பணிபுரிகின்ற இலட்சக்கணக்கானோரும் இந்த மண்ணின் மரபைக் காப்பதற்கு முயற்சி செய்கின்ற மாபெரும் தொண்டர்கள். சைவ சமயத்தை வந்தேறிச் சமயங்கள் அழிப்பதில் இருந்து காக்கப் பொதுபல சேனை சைவர்களுக்குத்துணை நிற்கும் என நம்புகிறோம். – என்று புகழ்ந்துரைத்துள்ளார் மறவன்புலவு க. சச்சிதானந்தன்.



காலைக்கதிர் Kalaikathir

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

நீதிமன்ற அவமதிப்புத் தீர்ப்பை அவமதித்த மன்னிப்பு உத்தரவு

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பொதுபலசேன அமைப்பின் செயலாளர் வண. கலகொட அத்த ஞானசாரதேரருக்கு திடீரென பொது மன்னிப்பு வழங்கி, அவரை விடுதலை செய்திருக்கும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கை இன நல்லிணக்கம், சமூகப் புரிந்துணர்வு, மத சௌஜன்யம் ஆகிய வற்றுக்கு வைத்த மிகப் பெரிய ஆப்பாகவே கருத வேண்டும்.

மிக மோசமான – பிழையான – காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மிகத் தவறான அரசியல் முடிவு இது.

கடும் போக்கும் சிந்தனை – குறிப்பாக மதத் தீவிரவாதப் போக்கு – நாட்டைப் பேரழிவில் வீழ்த்தியிருக்கும் இச்சமயத்தில் மதத்தின் பெயரால் – இனத்தின் பெயரால் முன்னெடுக்கப்படுகின்ற கடும் தீவிரப்போக்கைக் கட்டுப்படுத்துவதே மிக முக்கியமான – மிக அவசரமான – மிக அவசியமான – நடவடிக்கையாகும்.

அதன் மூலம் மட்டுமே நாட்டில் அமைதி நிலையையும் சமாதானத்தையும் ஓரளவுக்கு மீள ஏற்படுத்த முடியும்.

ஆனால், அதற்கு முற்றிலும்மாறாக, வண. ஞானசாரதேரர் விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற முறையில் கட்டுமட்டில்லாமல் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் விதத்தில் எடுத்திருக்கும் இந்த நடவடிக்கை அமைதிக்கும், சமாதானத்துக்குமான வாய்ப்பை முறியடித்துக் குழப்பும் தீஞ்செயலாகவே அமைந்திருக்கின்றது.

இலங்கைத் தீவில் பௌத்தர்கள் அல்லாத பிரஜைகள் தொடர்பில் வண. ஞானசாரதேரர் மேற்கொண்ட அட்காசங்கள் பரகசியமானவை. அத்துமீறல்கள் உலகறிந்தவை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. சுட்டிக் காட்டுகின்றமை போல இந்த அட்டகாசங்கள், அட்டூழியங்கள் தொடர்பில் நாட்டின் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் பல அமைப்புகளும் ஒரு போதும் நடவடிக்கை எடுக்காத நிலையில்–

ஹோமாகம நீதிமன்றுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்த போதே, அது குறித்து நீதிவான் முறைப்பாடு செய்ய, மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் அவருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதுவும் வண. ஞானசாரர் தனது தரப்பை நியாயப்படுத்துவதற்கான வாதங்களை உரிய முறையில் நீதிமன்றத்தில் முன்வைப்பதற்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்ட பிறகே அவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்தத் தண்டனைத் தீர்ப்பை வழங்கியது. அந்தத் தீர்ப்புத் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேன் முறையீடும் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப் பட்ட நிலையிலேயே அவர் சிறைவாசம் அனுபவித்து வந்தார்.

அவ்வாறு ஆறு வருடச் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியவரை ஒன்பது மாதங்களில் விடுதலை செய்வித்தமை மூலம் இரண்டு செய்திகளை ஜனாதிபதி வெளிப்படுத்தி இருக்கின்றார் எனக் கருதுகிறோம்.

நீதிமன்றத்துக்குள் வைத்து நீதிவானையும், நீதிமன்ற நடவடிக்கைகளையும் அவமதித்து அட்டகாசம் புரிந்தவரை, குறைந்தபட்சம் அதற்காக பொது வெளியில் நீதிமன்றிடம் பகிரங்க மன்னிப்புக்கூட கோராத ஒருவரை, அதற்கான தண்டனைத் தீர்ப்பிலிருந்து காப்பாற்றியதன் மூலம் நாட்டின் நீதித்துறைக்குரிய மரியாதை யாது என்பதை நாட்டின் தலைவர் கோடி காட்டியிருக்கின்றார்.

அடுத்த விடயம் – கூட்டமைப்பின் எம். பியான சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ள அம்சம்.

நாட்டில் சமத்துவம், அமைதி, சமாதானம் ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கு சவாலாக இருப்பது இனவெறி, மத வெறி அல்லது அவற்றின் பெயரால் கட்டவிழும் தீவிரவாதம்.

இவ்விடயத்தில் எந்த இனத்தவர், எந்த மதத்தவர், எந்த மொழியினராயினும் அனைத்துக் கடும் போக்காளர்களையும் ஒரே விதமாக – கடுமையாக – கையாள வேண்டியமை காலத்தின் கட்டாயமாகும்.

ஆனால், மாற்று மதங்கள் , மாற்று மொழிகள், மாற்று இனங்கள் மீது கடும் போக்குக் கொண்ட ஒரு பௌத்த தேரர் விடயத்தில் அதிமென்போக்கில் ஜனாதிபதி நடந்து கொள்கின்றமை அபத்தமான – ஆபத்தான – முன்னுதாரணமாகி உள்ளது.

இது, சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் கடும் தீவிரப் போக்குடன் செயற்படும் சக்திகள் இந்த நாட்டில் பேணிப் போற்றிப் பாதுகாக்கப்படும் என்றும் –

ஆனால், பெரும்பான்மை மதத்தினருக்கு அற்ப, சொற்ப அசௌகரியங்களை அளிக்கும் செயல்கள் கடுமையாகத் தண்டிக்கப்படும் என்றும் –

ஒரு செய்தியையே வெளிப்படுத்தி, உறுதிப்படுத்தி நிற்கின்றது.

தமிழ்க் கூட்டமைப்பு கூறுவது போல இது பேரினவாதத்தை – அதன் மேலாதிக்கத்தை – இன்னொரு கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் ஆபத்தான நடவடிக்கை. மிகவும் கண்டனத்துக்குரிய செயல்.

மதத் தீவிரவாதத்தால் மோசமான இழப்புக்களையும் பின்னடைவுகளையும் பாதிப்புக்களையும் எதிர்கொண்டு குழப்பத்தில் மூழ்க்கியிருக்கும் இலங்கை தேசத்தில் சமாதானம், அமைதி, நல்லிணக்கம் போன்றவற்றை மீளக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு விடுக்கப்பட்ட ஆபத்து எச்சரிக்கை நடவடிக்கையே இது.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் கொடூர விஷப் போக்கின் ஆழத்தினையும், பரிமாணத்தையும் புரியாமல், அது ஆக, இஸ்லாமியருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் மட்டுமே எதிரானது என்று தப்புக் கணக்குப் போட்டு, பௌத்த பேரினவாதிகளுக்கு பச்சைக் கம்பளம் விரிக்கும் சிவசேனையினர், அந்தக் கடா மார்பில் பாயும் போதுதான் புரிந்து கொள்வார்கள்.

பதவியிலிருந்து விலகப்போவதில்லை ஹிஸ்புல்லா, அசாத் சாலி விடாப்பிடி

கொழும்பு, மே 25

ஆளுநர் பதவிகளை நாம் கேட்டுப் பெறவில்லை. ஜனாதிபதியே அதனை தந்தார். எனவே ஜனாதிபதி, தமது பதவிகள் தொடர்பாக எடுக்கும் தீர்மானத்தைத்தவிர்த்து எந்தச்சந்தர்ப்பத்திலும் பதவிகளில் இருந்து விலகப் போவதில்லை எனக் கிழக்கு மாகாண ஆளுநர் எம். எல். ஏ.எம். ஹிஸ்புல்லா மற்றும் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா கருத்து தெரிவிக்கையில்–

எனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் பொய்யானவை. அவை எவற்றையும் ஏற்க முடியாது. அரசியல் ரீதியாக இந்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். எனினும் ஜனாதிபதியே தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

ஜனாதிபதியே என்னை நியமித்தார். ஜனாதிபதிதீர்மானத்தை எடுப்பார். சில பிக்குமார் உட்பட சிலர் சுமத்தும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை–என்றார்.

மேல் மாகாண ஆளுநர் அசாத்சாலிகருத்துதெரிவிக்கையில்–

நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. தனக்கு நம்பிக்கையானவரையே தனது பிரதிநிதியாக ஆளுநராக நியமிப்பார். இந்தப் பதவியை நாங்கள் கேட்டுவாங்கவில்லை. ஜனாதிபதியேநியமித்தார். நாங்கள் ஜனாதிபதிக்குநம்பிக்கையான எமது பணிகளை முன்னெடுத்துசெல்வோம். கடந்த நான்கு மாதங்களில் வரலாற்றில் எந்த ஆளுநரும் செய்யாத பணிகளை நான் செய்து முடித்திருக்கின்றேன்.

காய்க்கும் மரத்தின் மீதுதான் கல் எறிவார்கள். வேலை தெரியாத பலர் நாட்டில் இருக்கின்றனர். சில வாய்ச்சொல் வீரர்கள் இருக்கின்றனர். தவறாக வழி நடத்தப்பட்ட சில பிக்குமாரும் இருக்கின்றனர்–என கூறியுள்ளார். (ஐ)

பொதுமன்னிப்பின்கீழ் தனது மகனை விடுதலை செய்தமைக்கு நன்றி கூறுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன் தினம் இரவு நேரில் சந்தித்தார் ஞானசார தேரரின் தாயார். (ஐ)

தமிழினத்தின் விடுதலைக்காக தெளிவான கொள்கையுடன் போராடினார்கள் புலிகள்!

மு.கா. தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, மே 25

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், உயிர்த்த ஞாயிறு தற்கொலைதாரிகளுக்கும் இடையில் துளியளவும் ஒற்றுமையில்லை. விடுதலைப் புலிகள் தம் இனத்தின் விடுதலைக்காகத் தெளிவான கொள்கையுடன் போராடினார்கள். தமிழ் மக்களும் அவர்களுக்கு ஆதரவளித்தார்கள்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தற்கொலைதாரிகள், யாரோ ஒருவனின் தேவைக்காக கொள்கையே இல்லாமல் அப்பாவி மக்களைக் கொலைசெய்துள்ளார்கள். இது சுத்தப் பைத்தியக்காரத்தனம்.

ஜ.எஸ்.ஜ.எஸ். தீவிரவாத இயக்கத்தை இலங்கையில் எவரும் ஏற்கவே மாட்டார்கள். இந்தத் தீவிரவாத இயக்கம் முற்றாக ஒழிக்கப்படவேண்டும் – என்றார். (ஐ)

ஞானசாரரை விடுவித்த அரசு சுதாகரனைப் புறக்கணித்தது

சாந்தி எம்.பி சபையில் விசனம்

கொழும்பு, மே 25

நீதிமன்றத்தை அவமதித்த ஞானசார தேரரை விடுவிக்க நடவடிக்கை எடுத்த அரசு, அரசியல் கைதியான ஆனந்தசுதாகரன்விடயத்தில் ஏன் எந்தக் கருணையும் காட்டவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றசபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

சிங்களவர்களுக்கு ஒரு சட்டமும் எமக்கு வேறு சட்டமும் என்ற வகையில் பாகுபாடாக நடந்து கொள்வது நியாயமானதா?

பயங்கரவாதத் தாக்குதல் நடத்தியவர்கள் யார், அவர்களுடன் தொடர்பில் உள்ள அரசியவாதிகள் யார் என்பதெல்லாம் தெரிந்தும் வடக்கில் சோதனைச் சாவடிகளை அமைப்பதும் மக்களை கஷ்டப்படுத்துவதும் நியாயமானதா? –என்றார். (ஐ)

நாளை

26.05.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப. 1.39 வரை
திதி : ஸப்தமி மு.ப. 9.14 வரை
இராகுகாலம் : 4.22 – 5.52
சுப நேரம்: 8.52 – 10.22

இலங்கையில் அமெரிக்கா நிரந்தர தளம் அமைக்காது!

தூதுவர் அலய்னா திட்டவட்டம்

கொழும்பு, மே 25

இலங்கையில் நிரந்தரமான அமெரிக்கத் தளத்தை அமைப்பது தொடர்பான எந்த உடன்பாடும் எட்டப் படவில்லை என்று அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப் லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் நேற்றுமுன்தினம் கண்டியில், அஸ்கிரிய, மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான, ஒத்துழைப்பின் மூலம், பாதுகாப்புக்கான உறுதியான அடித்தளம் இடப்பட்டுள்ளது.

கூட்டாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக இலங்கையுடன் நாங்கள் உடன்பாடு செய்துள்ளோம்.

கடந்த அரசுடன் கூட இது போன்ற உடன்பாடுகளை நாங்கள் செய்திருக்கிறோம்.

எனினும், இலங்கையில் நிரந்தரமான தளத்தை அமைக்க நாங்கள் தீர்மானிக்கவில்லை. அதுகுறித்து எந்த உடன்பாடும் கிடையாது.

அமெரிக்கப்படைகள் பயணங்களை மேற்கொள்வதற்கு அனுமதிப்பதற்கு மாத்திரம் உடன்பாட்டை எட்டியுள்ளோம். எனவே நாங்கள் இணைந்து பணியாற்ற முடியும்.

நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், ஏனைய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் இந்த உதவி, மிகவும் முக்கியமானது.

இரண்டு நாடுகளினதும் பாதுகாப்பு மற்றும் பிராந்தியப் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்கு எமது இருதரப்பு உறவுகள், அனுமதிக்கும் – என்றார். ஐ

மாணவரின் உணவைப் படையினர் கைகளால் சோதனையிடுகின்றனர்

பெற்றோர் கடும் விசனம் வெளியீடு

கிளிநொச்சி, மே 25

கிளிநொச்சியில் உள்ள பாடசாலை ஒன்றில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு உள்ள இராணுவத்தினர் , மாணவர்களின் உணவு வகைகளை கைகளால் சோதனையிடுவது தொடர்பில் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பாடசாலைகளின் பாதுகாப்பையும் மாணவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் நோக்குடன் , இராணுவத்தினர் சோதனை நடவடிக்கை எனும் பெயரில் மாணவர்களைத் தினமும் இம்சித்துவருகின்றனர்எனக் குற்றசாட்டுக்கள் எழுந்துள்ளன.

மாணவர்கள் , ஆசிரியர்கள் கடுமையான சோதனைகளுக்கு பின்னரே பாடசாலைக்குள் செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள். அதன் போது சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் வெற்றுக் கைகளால் மாணவர்களின் புத்தகப்பை முதல் உணவுப் பொட்டலம் வரை சோதனையிடுகின்றார்கள்.

அதனால் மாணவர்கள் தாம் கொண்டு செல்லும் உணவை வீசும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தாம்காலையில்பிள்ளைகளுக்கு உணவு சமைத்துக் கொடுத்து விட அவர்கள் அதனை உட்கொள்ள முடியாது வீசி விட்டுப் பசியோடு கல்வியைத் தொடரும் நிலைமை காணப்படுவதாகப் பெற்றோர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

அது தொடர்பில் உரியவர்கள் தலையிட்டு இதற்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தருமாறு பெற்றோர் கோருகின்றனர். ஐ

பிரதமர் ரணிலுடன் சீனத் தூதுவர் பேச்சு

தீவிரவாத முறியடிப்பு குறித்து

கொழும்பு, மே 25

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, சீனத் தூதுவர் செங் ஷியுவான் அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இதன்போது, சீனா – இலங்கை இடையில், பொருளாதாரம், சுற்றுலா, கலாசாரம், மற்றும் தீவிரவாத முறியடிப்புத் துறைகளில் எவ்வாறு ஒத்துழைத்துச் செயற்படுவது என்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், ஆசிய நாகரிகங்களின் மாநாடு தொடர்பாகப் பிரதமருக்கு விளக்கமளித்துள்ள சீனத் தூதுவர் செங், இந்த மாநாட்டில் பங்கேற்கச் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதியும், சீன அதிபரும் நடத்திய பேச்சுக்கள் பயனுள்ளவையாக இருந்தன என்றும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையின் தற்போதைய நிலைவரங்களை எடுத்துக் கூறிய பிரதமர், இரண்டு நாடுகளும் இணைந்து முன்னெடுக்கும் திட்டங்களுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்க அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழுவில் எட்டு எம்.பிக்கள்!

கொழும்பு, மே 25

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரிப்பதற்காக, 8 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக் குழு ஒன்றை சபாநாயகர் கரு ஜெயசூரிய நியமித்துள்ளார்.

கடந்த மாதம் இடம்பெற்ற தாக்குதல்கள் மற்றும், அந்த தாக்குதல்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அல்லது அமைச்சர்கள் உதவியுள்ளனரா என்று கண்டறிவதற்காகத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்க நாடாளுமன்றத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதற்கமைய, நேற்றுமுன்தினம் 8 உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழுவின் விவரத்தை சபாநாயகர் அறிவித்தார்.

இந்த தெரிவுக்குழுவுக்கு தலைவராகப் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிங்க செயற்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் உறுப்பினர்களாக அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரவி கருணாநாயக்க ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர்களான பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா, கவிந்த ஜெயவர்த்தன, ஜெயம்பதி விக்ரமரத்ன, எம்.ஏ.சுமந்திரன், ஆஷு மாரசிங்க ஆகியோரும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இந்தத் தெரிவுக்குழுவில் இடம்பெற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மஹிந்த – மைத்திரி அணிகள் இரண்டும் மறுத்து விட்டன. ஐ

ஆதனப் பெயர்மாற்றம்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்டவட்டாரம்06,யாழ்ப்பாணம்வீதி, ஆதன இலக்கம் 132என்ற இலக்கத்தைக் கொண்டதும் கோப்பாய் கோவிற்பற்று, கோப்பாய் தெற்கு இறை ஊட்டுக் குளியும் மறு பிரிவுகளும் மொத்த நிலப்பரப்பு பரப்பு05 குழி 0.72 இற்கு, இரு பிரிவுகளாகமுறையே02பரப்புகுழி 06.26 கொண்ட கிராம சேவையாளர் பிரிவு : J/260 யாழ்ப்பாணம் வீதி, கோப்பாயில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையாளர் பெயர் திரு.கே. ஆறுமுகமும் ஏனையோரும் என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த இரு பிரிவிடல் ஆதனத்தை முறையே மாரியம்மன் வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாயைச் சோந்த திரு.பவானந்தன் பெண் விஜிதாவும், திரு.ஜோர்ஜன் பெண் ஆரணி தன்னுடைய அற்றோனிக் தத்துவகாரர் திரு.கிருஸ்ணசாமி பவானந்தன் (771480802V) மூலம் நிலப்பரப்பு முறையே இரு பிரிவுகளாக பரப்பு 02 குழி 06.26 இற்கு உரிமை கோருகின்றனர்.

மேற்படி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு திரு.வீ. கௌதமன் அவர்களால் எழுதப்பட்ட முறையே 258, 259ஆம் இலக்க19.03.2017 ஆம்திகதி இரண்டு உறுதி மூலம் முறையே திரு.பவானந்தன் பெண் விஜிதா, திரு.ஜோர்ஜன் பெண் ஆரணிஅவர்களுக்கு, திரு.சி.கணேசன் பெண் விமலநாயகி, இளமுருகன் கைம்பெண் நிர்மலாமற்றும் இளைய தம்பி கைம்பெண் பறுவதபத்தினி அவர்களால் அற்றோனிக் தத்துவம் மூலம் ரூ 750, 000.00 இற்கு அறுதியாக வழங்கப்பட்டு வந்தடைந்தது.

மேற்படி நிலப்பரப்பு நிலப்பரப்பு பரப்பு 05 குழி 0.72 இற்கு எல்லை கிழக்கு கால்வாயாகவும், வடக்கு கால்வாயாகவும் மேற்கு கனகசபாபதி சுப்பிரமணியம் அவர்களின் ஆதனமும், தெற்கு கனகசபாபதி சுப்பிரமணியம் அவர்களின் ஆதனமும் ஆகும். இவ்வாதனம் உத்தரவுபெற்ற நில அளவையராளர் T.தங்கராஜா அவர்களால் அளந்து வரையப்பட்ட 932B ஆம் இலக்க 15.03.2017 ஆம் திகதி படத்தில் Lot - 01, Lot - 02 எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தை முறையே திரு.பவானந்தன் பெண் விஜிதாவும், திரு.ஜோர்ஜன் பெண் ஆரணியும் எனும் பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 25.06.2019 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது திரு.பவானந்தன் பெண் விஜிதாவும், திரு.ஜோர்ஜன் பெண் ஆரணியும் என்ற பெயருக்கு முறையே பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக் கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

தியாகராஜா நிரோஷ் : தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
25.05.2019

மின்தடை

யாழ்ப்பாணம்,
மே 25

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

யாழ் பிரதேசத்தில் – கைதடி கோப்பாய் வீதி, கைதடி வடக்கு, கைதடி நவபுரம், இராமலிங்கம் சந்தி, கோப்பாய் பொலிஸ், பாற்பண்ணை, றோட், திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, இராமலிங்கம் சந்தியிலிருந்து முடமாவடி கிளி கடை வரை, பூங்கனிச்சோலை, அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி, கச்சாய் வீதி சாவகச்சேரி நகரம், நுணாவில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத் தொகுதி, பத்தானை, சுதுமலை, மாப்பியன், மயிலிட்டி ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் .–

கிளிநொச்சி பிரதேசத்தில்– குளவிசுட்டான், நெடுங்கேணி, றம்பைக்குளம், தண்டுவன் ஒலுமடு, சேனைப்புலவு, ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு மருதோடை, கற்குளம், கோவில் புளியங்குளம், பெரியமடு, கோம்பாவில், இரணைப்பாலை, செம்மண்கண்டூர், நெடுங்கேணி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி மொபிட்டல் கோபுரம், நெடுங்கேணி நீர்ப்பாசன சபை, தண்டுவன் பழப்பதனிடும் நிலையம் ஆகிய இடங்களிலும் –

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நமது ஈமான் நற்சிந்தனைகள்

நான் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு தேடுகிறேன். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை. அவன் நித்திய ஜீவன், என்றும் நிலைத்திருப்பவன் புனித றமழானில் அனைத்து அருளும் கிடைக்க வேண்டுகின்றேன்.

நோன்பு திறக்கும் நேரம்
மாலை 6.21
ஸஹர் முடிவு அதிகாலை4.18
(எம்.எல்.லாபிர்)

காலைக்கதிர் Kalaikathir

மோடியின் பிரதமர் பதவியேற்பு நிகழ்வுக்கு உலகத் தலைவர்கள் பலருக்கும் அழைப்பு

வல்லரசுகளின் தலைவர்களை ஒன்றிணைத்து பிரமாண்டமான விழாவாக நடத்த முழுமுயற்சி

பிரதமர் மோடி பதவி ஏற்பு விழாவில் பங்கேற்க அமெரிக்க அதிபர் டிரம்ப், ரஷ்ய அதிபர் புடின் உள்ளிட்ட பல்வேறு வெளிநாட்டு தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தனிப்பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்க உள்ளது. வரும் 30 ஆம் திகதி பதவி ஏற்பு விழா நடைபெற இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பதவி ஏற்பு விழாவை பிரம்மாண்டமாக நடத்த வும் பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார்.

இந்த நிலையில், பதவி ஏற்பு விழாவிற்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட இருக்கின்றன. பதவி ஏற்பு விழாவில் பங்கேற்பதற்காக உலகத் தலைவர்கள் பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட உள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தில் இருக்கும் வல்லரசு நாடுகள் ஐந்தினதும் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

அதன்படி, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ரஷ்ய அதிபர்

விளாடிமிர் புடின், சீன அதிபர் ஜின் பிங் மற்றும் இங்கிலாந்து, பிரான்ஸ் அதிபர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட உள்ளதாம். இது தவிர்த்து, ஜப்பான், இஸ்ரேல், சவூதி அரேபியா மற்றும் சார்க் கூட்டமைப்பு நாட்டுத் தலைவர்களுக்கும் பிரதமர் மோடி பதவி ஏற்பு விழாவில் பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்பட இருப்பதாக தகவல்கள் கூறுகின்றன. இதனிடையே, பிரதமர் மோடியின் பதவி ஏற்பு விழாவில் பங்கேற்பதற்கு, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு அழைப்பு விடுக்கப்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இந்த விஷயம் குறித்து இப்போது எதுவும் கூற இயலாது. பிரதமர் அலுவலகம் முடிவு செய்த பின்னர், அடுத்த சில நாள்களில் இதுகுறித்து அதிகாரபூர்வ அறிவிப்புகள் வெளியிடப்படும் என்று பெயர் தெரிவிக்க விரும்பாத மத்திய அரசு அதிகாரி ஒருவர் கூறி இருக்கிறார்.

பதவி விழாவை பிரம்மாண்டமாக நடத்தவும், இந்த வாய்ப்பை பயன்படுத்தி, உலக அரங்கில் தன்னை வலுவான தலைவராக முன்னிறுத்தவும், பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார் எனத் தெரிகிறது.

மேலும், ஐ.நா.பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தியா நிரந்தர உறுப்புரிமை பெறுவதற்கு அழுத்தம் கொடுக்கும் வாய்ப்பாகவும் இந்நிகழ்வைப் பயன்படுத்தப் பிரதமர் மோடி விரும்புகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2014 ஆம் ஆண்டு நடந்த பிரதமர் மோடி பதவி ஏற்பு விழாவில் அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை நினைவிருக்கலாம்.

இந்த நிலையில் பிரதமர் மோடியின் பெருவெற்றிக்கு உலத் தலைவர்கள் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்

ரூ. 600 கோடி பெறுமதி ஹெரோயின் பாக். மீன்பிடி படகிலிருந்து பறிமுதல்!

இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்த பாகிஸ்தான் மீன்பிடிப் படகில் இருந்து, இந்தியப் பணத்தில் 600 கோடி ரூபா மதிப்புள்ள போதைப் பொருள்களை இந்தியக் கடலோர காவல் படையினர் பறிமுதல் செய்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரபிக் கடலில் இந்தியா – பாகிஸ்தான் எல்லையில் குஜராத் மாநிலம் அருகே, பாகிஸ்தானைச் சேர்ந்த மீன்பிடி படகு ஒன்றில் பெருமளவு போதைப்பொருள் கடத்தப்படுவதாக சில நாள்களுக்கு முன் கடலோர காவல் படைக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதனையடுத்து விரைந்து நடவடிக்கையில் இறங்கிய அதிகாரிகள், நவீன படகுகளை வைத்தும் ஹெலிக்கொப்டர் உதவியுடனும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். இந்நிலையில் நேற்று முன்தினம் நடுக்கடலில் இந்திய எல்லைக்குள் நுழைந்த பாகிஸ்தான் படகை அதிரடியாக சுற்றிவளைத்தனர். பின்னர் குறிப்பிட்ட படகில் நடத்தப்பட்ட சோதனையில், ஹெரோயின் போதைப்பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

பாகிஸ்தான் நாட்டு மீன்பிடி படகிலிருந்து சுமார் 200 கிலோ அளவிலான 194 ஹெரோயின் பொட்டலங்கள் கைப்பற்றப்பட்டன.

அ.தி.மு.கவுடன் வைத்த கூட்டே இத்தோல்விக்குக் காரணமாம்!

பொன்.ராதாகிருஷ்ணன் புலம்பல்

தோல்வி காரணமாக, பா.ஜ.க. தலைவரும் இதுவரை மத்திய அமைச்சராக இருந்தவருமான பொன்.ராதாகிருஷ்ணன் மிகுந்த மன வருத்தத்தில் இருக்கிறார்.

கடந்த 2014 நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் கன்னியாகுமரி தொகுதியில் மட்டும் பா.ஜ.க. வென்றது. இங்கு அக்கட்சியின் மூத்த தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்று, மத்திய அமைச்சர் பதவியை பெற்றார்.

ஆனால் இம்முறை நிலைமை தலைகீழாகப் போய்விட்டது. கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியின் வசந்தகுமார் வெற்றி பெற்றுள்ளார்.

இவரை எதிர்த்து போட்டியிட்ட பொன்.ராதாகிருஷ்ணன் தோல்வியை தழுவினார். கடந்த 2014ல் அடைந்த தோல்விக்கு வசந்தகுமார் பழிதீர்த்துள்ளார் என்றே கூறலாம்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வாக்கு எண்ணும் மையத்திற்கு அருகே தனிமையில் அமர்ந்து, பொன்.ராதாகிருஷ்ணன் தனது செல்போனில் தேர்தல் முடிவுகளை கவனித்து கொண்டிருந்தார். இது தொடர்பான புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது.

ஆனால் தொடக்கத்தில் இருந்தே பின்னடைவில் இருந்ததால், கலக்கத்தில் இருந்தார்.

இறுதியில் தோல்வியே கிடைத்ததால், இதற்கெல்லாம் அ.தி.மு.க. உடன் வைத்த கூட்டணி தான் காரணம் என்று புலம்பிக் கொண்டே அங்கிருந்து கிளம்பிச் சென்றார்.

அரசியலை விட்டு எப்போது விலகுவீர்கள்? சித்துவைப் பிய்த்து எடுக்கும் ஆர்வலர்கள்!

அமேதி தொகுதியில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தோல்வி அடைந்தால் அரசியலை விட்டு விலகத் தயார்" என்று பஞ்சாப் காங்கிரஸ் அமைச்சரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான சித்து சவால் விட்டிருந்தார். எந்த முகூர்த்தத்தில் அவர் வாய் மலர்ந்தாரோ, அமேதியில் ராகுல் தோல்வியடைந்து விட்டார்.

எனவே, அமேதியில் ராகுல் தோல்வி அடைந்ததால், விடுத்த சவாலை பின் பற்றி சித்து அரசியலைவிட்டு விலகுவாரா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

நாடு முழுவதும் ஏராளமானோர், அரசியலைவிட்டு எப்போது விலகுகிறீர்கள் என சித்துவை டுவிட்டரில் கேட்ட வண்ணம் இருக்கின்றனர். இது டிரெண்ட் ஆகி உள்ளது.

தமிழக சட்டசபையில் ஊசலாடும் பெரும்பான்மை

தமிழகத்தில் 22 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 13 தொகுதிகளில் தி.மு.கவும் 9 தொகுதிகளில் அ.தி.மு.கவும் வெற்றிபெற்றுள்ளன. இதைத் தொடர்ந்து தமிழக சட்டப்பேரவையில் கட்சிகளின் பலம் எப்படி மாறியிருக்கிறது?

தமிழகத்தில் 22 தொகுதிகள் காலியாக இருக்கின்றன என அறிவிக்கப்பட்ட போது, சட்டப்பேரவையில் அ.தி.மு.கவின் பலம், சபாநாயகரையும் சேர்த்து 113 ஆக இருந்தது. அதிலும் அறந்தாங்கி, கள்ளக்குறிச்சி மற்றும் விருதாச்சலம் அ.தி.மு.கழக எம்.எல்.ஏ.க்கள் தினகரன் ஆதரவாளர்கள் என்பதால் சட்டப்பேரவையில், அ.தி.மு.க. வின் பலம் 110 ஆகக் குறைந்திருந்தது.

மேலும் இரட்டை இலை சின்னத்தில் வெற்றிபெற்ற கருணாஸ், தமீமுன் அன்சாரி தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படையாகக் கூறாமல் இருந்து வந்தனர். இதனால் பேரவையில் எடப்பாடி பழனிசாமி அரசை உறுதியாக ஆதரிக்கும் எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை 108 ஆக இருந்தது.

இந்த நிலையில் 22 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் குறைந்தது 10 இடங்களில் வெற்றிபெற்றால்தான் சட்டப்பேரவையில், பெரும்பான்மை பலத்துடன் அ.தி.மு.க. ஆட்சி நீடிக்கும் என்ற நிலை இருந்தது. தற்போது இடைத்தேர்தல் முடிவுகள் வெளியாகி, அ.தி.மு.க. 9 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது. இதனால் சட்டப்பேரவையில் அ.தி.மு.க. வின் பலம் 117 ஆகியுள்ளது.

இருந்தாலும், தினகரன் ஆதரவாளராக இருந்த கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ. பிரபு, சபாநாயகர் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியமையைத் தொடர்ந்து, தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றி, நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் எடப்பாடி பழனிசாமி அரசுக்கு ஆதரவாகவே வாக்களிப்பார் எனப் பேட்டியளித்திருந்தார்.

இதனால் சட்டப்பேரவையில் பெரும்பான்மைக்கு தேவையான 118 இடங்களை பெற வாய்ப்புள்ளது. மேலும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்ட விருதாச்சலம் மற்றும் அறந்தாங்கி எம்.எல்.ஏக்கள் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அரசை ஆதரிக்கின்றனர் எனக் கூறினால் அ.தி.மு.கவின் பலம் 120 ஆக வாய்ப்புள்ளது.

இரட்டை இலை சின்னத்தில் வெற்றிபெற்ற கருணாஸ் மற்றும் தமீமுன் அன்சாரி ஆகியோர் அரசுக்கு ஆதரவளித்தால் சட்டப்பேரவையில் எடப்பாடி பழனிசாமி அரசின் பலம் 122 ஆக அதிகரிக்கும்.

இதனிடையே, இடைத்தேர்தலில் 13 தொகுதிகளில் வென்றுள்ள தி.மு.கவின் பலம் 101 ஆக உயர்ந்துள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு 8 எம்.எல்.ஏக்களும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கு ஒரு எம்.எல்.ஏவும் என தி.மு.க. கூட்டணியின் பலம் 110 ஆக உள்ளது. சுயேச்சை எம்.எல்.ஏ. தினகரன் மற்றும் அவரது ஆதரவு எம்.எல்.ஏக்கள் 2 பேர் மற்றும் கருணாஸ், தமீமுன் அன்சாரி ஆகியோர் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தால் எதிர்க்கட்சிகளின் பலம் 115 ஆகும்.

அதேசமயம், வசந்தகுமார் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு எம்.பி.யாக பதவியேற்றால் தமிழக சட்டப்பேரவையில் எடப்பாடி பழனிசாமி அரசை எதிர்க்கும் எம்.எல்.ஏக்களின் பலம் 114 ஆகக் குறைந்துவிடும்.

ஏராளமான பாக். குழந்தைகள் எச்.ஐ.வி. தொற்றினால் பாதிப்பு

பாகிஸ்தானில் ஏராளமான குழந்தைகள் எச்.ஐ.வி. நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு இருக்கின்றமை தெரியவந்துள்ளது.

முதல் முதலாக பெப்ரவரி மாதம் தென் பாகிஸ்தானில், ஒரு குழந்தை தீவிர காய்ச்சலின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏராளமான குழந்தைகள் தீவிர காய்ச்சலின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டன.

குழப்பமடைந்த மருத்துவர் இம்ரான் ஆர் பானி குழந்தைகளின் ரத்தத்தை பரிசோதித்துப் பார்த்ததில் அனைவருக்கும் எச்.ஐ.வி. தொற்று இருப்பது தெரியவந்தது.

ஏப்ரல் 24 ஆம் திகதி வரை ஒரு சிறு பகுதியில் மட்டும் 15 குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பது தெரியவந்தது. அதனை தொடர்ந்து சிந்து மாகாணத்தில் தீவிர காய்ச்சலில் பாதிக்கப்பட்ட பலரிடம் செய்யப்பட்ட இரத்த பரிசோதனையில் 607 பேருக்கு எச்.ஐ.வி. இருப்பது தெரியவந்துள்ளது.

அதில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள். குழந்தைகளின் பெற்றோருக்கு எச்.ஐ.வி. இல்லாத போது, குழந்தைகளுக்கு மட்டும் எப்படி அது பரவியது என விசாரித்து வருகின்றனர்.

இந்தோனேசியாவின் ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடு என தெரிவித்து மக்கள் கிளர்ச்சி

6 பேர் உயிரிழப்பு; 200 பேர் காயம்; பல வாகனங்களுக்குத் தீ வைப்பு

ஜகார்த்தா, மே 25

இந்தோனேசியாவின் அதிபர் தேர்தலில் முறைகேடு நடந்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டை தொடர்ந்து, அரசுக்கு எதிரான போராட்டம் வலுப்பெற்று வருகிறது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அதிபர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். உலகின் 3 ஆவது பெரிய ஜனநாயக நாடான இந்தோனேசியாவில் அந்நாட்டின் அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளை தேர்வு செய்யும் 3 தேர்தல்களும் கடந்த மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றன.

இந்த நிலையில், அதிபர் தேர்தலுக்கான அதிகார பூர்வ இறுதி முடிவுகளை அந்நாட்டு தேர்தல் ஆணையம் கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

இதில் 55.5 சதவீத வாக்குகளைப் பெற்றுத் தற்போதைய அதிபர் ஜோகோ விடோடோ மீண்டும் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி பிரபோவோ சுபின்யான்டோ 10 சதவீத வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை நழுவவிட்டார்.

இந்தத் தேர்தலில் பெரும் முறைகேடுகள் நடைபெற்றன எனப் பிரபோவோ சுபின்யான்டோ குற்றம்சாட்டினார். மேலும் தேர்தல் முடிவுகளை எதிர்த்து அரசமைப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர இருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரபோவோ ஆதரவாளர்கள் செவ்வாய்க்கிழமை இரவு போராட்டத்தில் குதித்தனர். தலைநகர் ஜகார்த்தா உள்பட பல்வேறு நகரங்களில் ஆயிரக்கணக்கானோர் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

ஆரம்பத்தில் அமைதியாக நடைபெற்ற இந்த போராட்டத்தில் திடீர் வன்முறை வெடித்தது. போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்கினர். மேலும் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்குத் தீவைத்தனர்.

அதனை தொடர்ந்து, பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகைகுண்டுகளை வீசியும் போராட்டக்காரர்களை விரட்டி அடிக்க முயன்றனர். இதில் இருதரப்புக்கும் இடையே கடுமையான மோதல் வெடித்தது. இந்த மோதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். இரு நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்த நிலையில், தேர்தல் முடிவுகளுக்கு எதிரான போராட்டம் வலுப்பெற தொடங்கி உள்ளது. புதன் இரவு தலைநகர் ஜகார்த்தாவில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு மாபெரும் போராட்டம் நடத்தினர். அப்போதும், பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அதிபர் ஜோகோ விடோடோ எச்சரித்துள்ளார்.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சோதித்தது பாக்

இஸ்லாமாபாத், மே25

பாகிஸ்தான் இராணுவம் கண்டம் விட்டு கண்டம் பாயும் 'ஹீன் -2' ஏவுகணையை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி சோதனை செய்தது. அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லக்கூடிய இந்த ஏவுகணை 1,500 கிலோ மீற்றர் தொலைவுக்கு அப்பால் உள்ள இலக்கைக் குறி வைத்துத் தாக்கக் கூடிய வல்லமை படைத்தது.

ஏற்கனவே, கடந்த 2008 ஆம் ஆண்டு இந்த ஹீன்-2 ரக ஏவுகணையை ஏவி பாகிஸ்தான் சோதனை செய்தது குறிப்பிடத்தக்கது. அதே சமயத்தில் ஹதீப்-6 என்ற ஏவுகணையையும் சோதனை செய்தது. அந்த இரு ஏவுகணைகளின் சோதனை ஓட்டம் வெற்றி அடைந்ததையொட்டி அப்போதைய பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப், ஏவுகணை தயாரிப்பு குழுவினருக்கு பாராட்டுகளை தெரிவித்திருந்தார்.

இந்த ஏவுகணைகளை, பாகிஸ்தான் விஞ்ஞானிகள், இரகசிய இடம் ஒன்றில் சோதித்துப் பார்த்துள்ளனர்.

இதையடுத்து நேற்று அரபிக் கடல் பகுதியில் இந்த ஏவுகணையை ஏவி சோதனை நடத்தியது பாகிஸ்தான். ஹீன் -2 ஏவுகணையின் சோதனை ஓட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து அந்நாட்டு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

எவரெஸ்டில் ஏற முயன்ற அமெ. வீரர் திடீர் மரணம்

டொனால்ட் லின் கேஷ் என்ற மெரிக்க மலையேறும் வீரர் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சிக்கு செல்ல முயன்ற போது நடுவழியில் மரணம் அடைந்தார்.

நேபாளத்தில் உலகின் உயரமான எவரெஸ்ட் சிகரம் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் ஏராளமானோர் மலையேறுவது வழக்கம்.

இந்த ஆண்டு நேபாள அரசு 381 பேருக்கு எவரெஸ்ட் சிகரத்தில் ஏற அனுமதி அளித்துள்ளது. அதன்படி மலையேறிய டொனால்ட் லின் கேஷ் நடுவழியில் புகைப்படம் எடுக்கும் போது திடீரென மயங்கி விழுந்து இறந்தார் என அவருடன் சென்ற வழிகாட்டி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஓர் இந்தியரும் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவரும் மரணம் அடைந்தனர். இந்தப் பருவ காலத்தில் வெளிநாடுகளைச் சேர்ந்த ஆறு பேர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முயன்று நடுவே மரணம் அடைந்துள்ளனர்.

இது தவிர மலையேறச் சென்ற மேலும் இருவர் காணாமற் போயுள்ளனர். அவர்கள் பனிப்புயலில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கனடாவில் பெரும் காட்டுத் தீ!

கனடாவில் காட்டுத்தீயை அணைக்கும் முயற்சியில் அந்நாட்டு தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கனடாவின் அல்பெர்டா (Alberta) மாகாணத்தில், வனப்பகுதி கடந்த இரு தினங்களாக தீப்பற்றி எரிந்து வருகிறது. சுமார் 97,000 ஹெக்டேர் பரப்பளவில் தீ கொழுந்துவிட்டு எரிந்து புகை மண்டலமாக காட்சியளித்து வரும் நிலையில், ஹெலிக்கொப்டர்கள் மூலம் தீயை அணைக்கும் முயற்சியில் 300க்கு மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

காட்டுத்தீ மேலும் பரவ வாய்ப்புள்ளதால், 5000க்கு மேற்பட்ட மக்கள் அங்கிருந்து பத்திரமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

30 லட்சம் போலி கணக்குகள் 'பேஸ்புக்'கில் இருந்து நீக்கம்!

'பேஸ்புக்'கில் இருந்து கடந்த ஒக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை 30 லட்சம் போலிக் கணக்குகளை நீக்கி உள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்நிறுவனம் வெளியிட்டிருக்கும் தகவலில், போலி கணக்குகள் உருவாக்குவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இவற்றுள் கடந்த ஒக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை 30 லட்சம் போலி கணக்குகளை உருவாக்கப்பட்ட சில நிமிடங்களில் கண்டறிந்து நீக்கி உள்ளதாகவும், இது அதற்கு முந்தைய ஆறு மாதங்களில் நீக்கப்பட்ட போலி கணக்குகளை விட இரு மடங்கு அதிகம் என்றும் பேஸ்புக் தெரிவித்துள்ளது.

இருந்தும் தொடர்ந்து லட்சக்கணக்கான போலி கணக்குகள் உருவாக்கப்படுகின்றமையால் அவற்றை கண்டறிய முடியாத நிலையும் இருப்பதாக பேஸ்புக் தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த 6 மாதங்களில் வெறுப்பை பரப்பும் வகையிலும், விதிமுறைகளை மீறும் வகையிலும் இருந்த 73 லட்சம் பதிவுகளை நீக்கி உள்ளதாகவும், இது அதற்கு முந்தைய 6 மாதங்களில் நீக்கப்பட்ட பதிவுகளை விட 54 லட்சம் அதிகம் என்றும் பேஸ்புக் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikathir

வெளிநாட்டு அகதிகள் விவகாரம்:

தமிழர் தாயகத்தில் தங்க வைக்கும் முயற்சி குறித்து சந்தேகங்கள்!

தமிழினஅழிப்பு போர் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்துள்ள போதும், போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த நிலங்களில் மீளக்குடியேற முடியாது நிலமீட்பு பேராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், இலங்கையில் தஞ்சமடைந்துள்ள வெளிநாட்டு அகதிகளை வடமாகாணத்தில் தங்கவைக்கும் திட்டத்திற்கு தொடர்ந்தும் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுவருகின்றது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அகதிகளை வவுனியா பூந்தோட்டம் முகாமில் தங்கவைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நகரசபை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை பிற்பகல் கலந்துரையாடலொன்று இடம்பெற்றதுடன், குறித்த கலந்துரையாடலை அடுத்து குறித்த அகதிகள் வவுனியாவில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மாவட்ட அதிபருக்கான மகஜர் மேலதிக அரச அதிபர் தி.திரேஷ்குமாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து அகதிகளான நிலையில் இலங்கையில் தஞ்சமடைந்தோர் நீர்கொழும்பில் தங்கவைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இலங்கையில் மேற் கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து அவர்கள் தங்குவதற்கு இடமின்றி கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனையடுத்து, கடந்த மாதம் 23 ஆம் திகதி தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்த சுமார் 550 பேரை பஸ்யால அஹமதியா முஸ்லிம் சமூக நலன்புரி நிலையத்திற்கு அனுப்பி வைக்கும் முயற்சி மேற் கொள்ளப்பட்ட போதும், மக்களின் எதிர்ப்பினால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

இதனையடுத்து குறித்த அகதிகளை தமிழர் தாயகமான வடமாகாணத்தின் வவுனியாவில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உட்பட தமிழ்மக்கள் பலரும் கடும் எதிர்ப்பு வெளியிட்ட போதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் இலங்கை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆகியோர் ஆதரவு வழங்கினர். அத்துடன் இந்த விடயம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கடந்த 8 ஆம் திகதி வவுனியாவுக்குசென்று அங்குசென்றுகலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதனையடுத்து கடந்த 17ஆம் திகதி பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகள் சிலர் வவுனியா பூந்தோட்டம் முகாமிற்கு அனுப்பப்பட்டனர்.

இவர்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் ஹூல் பொறுப்பேற்று யாழ்ப் பாணத்திற்கு அழைத்துச் சென்றார்.

எனினும் ரட்ணஜீவன் ஹூலின் இந்த நடவடிக்கை தவறானதெனவும், தனிப்பட்ட ஒருவர் அகதிகளை வீட்டில் தங்க வைப்பதால் சமூகப் பிரச்சினைகள் எழக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும், எனவே உடனடியாக அவர்களை மீண்டும் வவுனியாவுக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண ஆளுநர் மற்றும் பொலிஸார் தெரிவித்ததை அடுத்து அவர்கள் உடனடியாக மீண்டும் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

எனினும் இந்த அறிவுறுத்தல்களை ஏற்க முடியாது என ரட்ணஜீவன் ஹூல் கடந்த செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த வெளிநாட்டு அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள வவுனியா – பூந்தோட்டம் முகாமிற்கு செல்ல முற்பட்ட தேரர்கள் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த அகதிகளை வவுனியா – பூந்தோட்டம் முகாமில் தங்கவைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வவுனியா நகரசபை மண்டபத்தில் புதனன்று கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றதாக கூர்மையின் வவுனியா செய்தியாளர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து, வெளிநாட்டு அகதிகள் வவுனியாவில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மகஜரை கையளிக்கும் நோக்கில், நகரசபை உறுப்பினர்கள் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு சென்ற போதிலும் அங்கு அரசாங்க அதிபர் இல்லாத காரணத்தினால் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஷ்குமாரிடம் மகஜரைக் கையளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வவுனியா – மன்னார் பிரதி பொலிஸ் மா அதிபரிடம் மகஜரை கையளிப்பதற்காக சென்ற போதும், பிரதி பொலிஸ் மா அதிபர் அங்கிருக்காதமையினால் மற்றுமொரு அதிகாரியிடம் மகஜரை கையளித்ததாக உறுப்பினர்கள் கூர்மை செய்தித்தளத்திற்கு சுட்டிக்காட்டினர்.

இதேவேளை நகரசபை எல்லைக்குட்பட்ட அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள வவுனியா – பூந்தோட்டம் முகாமிற்கு சென்ற உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினருக்கு முகாமிற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும், அங்கு அதிகளவிலான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தமையுடன் வீதிக்கு குறுக்காக லொறியொன்றும் நிறுத்தப்பட்டிருந்தது எனவும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

தற்போது வவுனியாவில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளை அங்கு குடியேற் றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது, இந்த நடவடிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார்.

வடமாகாணத்தில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் அகதிகளைத் தங்கவைப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாதென வலியுறுத்திய அவர், இலங்கையின் ஏனைய பாகங்களில் அகதிகளைத் தங்கவைக்காமை ஏன் என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

அத்துடன் கடந்த 10 வருடங்களாக தமது சொந்த நிலத்தை இலங்கை இராணுவத்திடமிருந்து மீட்டுத்தருமாறு வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் மக்கள் குறித்து அலட்டிக் கொள்ளாத ஒற்றையாட்சி அரசாங்கம், வெளிநாட்டு அகதிகளை தமிழர் தாயகத்தில் குடியேற்றுவதற்கு முனைப்புடன் செயற்படுவது ஏன் எனவும் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தநிலையில் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது ருவிட்டர் பக்கத்தில், எனது தமிழ் சகோதரர்களுக்கு மீண்டும் ஒரு கோரிக்கை. இதை நாம் தான் கூடுதலாக விளங்கிக் கொள்ளலாம். எமது மக்கள் இலங்கையில் துன்புறுத்தலுக்கு அஞ்சி பல நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளார்கள். எம் வாசற்படியிலிருந்து இந்த ஏதிலிகளைத் துரத்தி நன்றி கெட்ட சமூகம் என்ற பெயரைப் பெற்றுக் கொள்ளாதீர்கள் எனத் தெரிவித்து குறித்த அகதிகளைக் குடியேற்றும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கியிருந்தார்.

> கடந்த 10 வருடங்களாக தமது சொந்த நிலத்தை இலங்கை இராணு வத்திடமிருந்து மீட்டுத்தருமாறு வலியுறுத்தி போராட் டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் மக்கள் குறித்து அலட்டிக்கொள்ளாத ஒற்றையாட்சி அரசாங்கம், வெளிநாட்டு அகதி களை தமிழர் தாயகத்தில் குடி யேற்றுவதற்கு முனைப்புடன் செயற் படுவது ஏன் எனவும் கேள்வி எழுப்பியிருந்தார்.

வவுனியாவில் வலுக்கும் எதிர்ப்பு அலை; அரசின் அடுத்த நடவடிக்கை என்ன?

எனினும் இலங்கை ஜனாதிபதியின் சட்டத்தரணி சுமந்திரன் கடந்த 10 வருடங்களாக நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் மீது காட்டாத கரிசனையை இந்த வெளிநாட்டு அகதிகள் மீது காட்டுவது ஏன் என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எது எவ்வாறிருப்பினும், கடந்த 30 வருடத்துக்கும் மேலாக போரால் பாதிக்கப்பட்ட மக்களது காணிகள் இலங்கை இராணுவத்தினாலும், இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்களாலும் அபகரிக்கப்பட்டு வருகின்றமையால் தமிழ்மக்கள் ஏதிலிகளாகவே உள்ள நிலையில், தமிழ் மக்களது பகுதிகளில் வெளிநாட்டு அகதிகளை தங்கவைப்பது தமிழர் தாயகத்தில் தமிழர்களது இருப்பை மேலும் கேள்விக்கு உள்ளாக்கும் செயற்பாடாகவே உள்ளது.

நன்றி : கூர்மை

பாக். அகதிகளால் இந்தியாவுக்கு பிரச்சினையை ஏற்படுத்தக்கூடாது

சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 25

பாகிஸ்தான் அகதிகளால் எமது மக்களுக்கு மாத்திரமன்றி, அருகில் உள்ள இந்தியாவுக்கும் பிரச்சினையை ஏற்படுத்தும் என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எந்த மதமும் அன்பையும் கருணையும் போதிக்கின்ற மதங்கள் தான். ஏந்த மதமும் எதிலிகளையும், அகதிகளையும் புறந்தள்ளும் மதங்கள் அல்ல. அது தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த கிறிஸ்தவராக இருந்தாலும் கூட. அரசியல் பிரமுகர்கள் தென்னிந்தியத் திருச்சபையில் இருக்கின்றார்கள். அவர்களின் விருப்பம் கருதி கொண்டு வரப்பட்டார்களா என்று கேட்கப்பட வேண்டிய விடயமாகக் கூட இருக்கலாம்.

அவ்வாறானவர்கள் தாங்கள் நேரடியாகக் கொண்டு வந்தால், அரசியல் வாழ்வுக்குப் பாதிப்பு ஏற்படும் என்றயோசனையில் இப்படிச்செய்திருக்கலாம். தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த அரசியல்வாதி

கள் கூட இதற்குப் பின்புலமாக இருக்கக்கூடும். இதைப்பற்றி முழுமையான தகவல் கிடையாது. எனவே, மதம் சொல்கின்றது. ஆகவே, நான் செய்கின்றேன் என்பது ஒரு விடயமல்ல. இன்றைய சமுதாயத்தில் என்னென்ன பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பது தான் முக்கியமான கேள்வியாக இருக்கின்றது.

எமக்கு மிக அருகாமையில் இருக்கக்கூடிய இந்திய நாட்டுக்கு உபத்திரவம் கொடுக்கக்கூடிய வகையில் இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கக் கூடாதென்றும் நான் கருதுகின்றேன். இந்தியா மிகப் பெரியதொரு நாடு. அவர்களின் பாதுகாப்பு என்பது மிக முக்கியமானது. இவ்வாறானவர்களை இங்கு கொண்டு வருவதென்பது, எமது மக்களுக்கு மாத்திரமன்றி, அருகில் உள்ள நாட்டிற்கும் பிரச்சினையாக மாறலாம்.

அந்தவகையில், எதிலிகள் சம்பந்தமாக தெளிவான சிந்தனைகள் இவ்வாறானவர்களுக்கு இருக்க வேண்டுமென்றே நான் கருதுகின்றேன் – என்றார். (ஐ)

கோட்டாபய சிங்கப்பூர் செல்வதற்கு அனுமதி

கொழும்பு, மே 25

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாடு செல்வதற்கு கொழும்பு விசேட நீதாய மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கோட்டாபய உள்ளிட்ட 07 பேருக்கு எதிரான வழக்கு கொழும்பு விசேட நீதாய மேல் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் விசாரணைக்கு வந்தது. சம்பத் அபயக்கோன் (தலைவர்), சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு அழைக்கப் பட்டது.

இதன்போது கோட்டாபய எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 02 ஆம் திகதி வரை வைத்திய தேவைக்காகச் சிங்கப்பூர் செல்ல அனுமதி வழங்குமாறு அவரது சட்டத்தரணி அலி சப்ரி நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். கோட்டாபயவுக்கு வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டுள்ள தடையைத் தற்காலிகமாக நீக்குமாறு அவர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

அதற்கு அரச தரப்பு சட்டத்தரணி எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதனடிப்படையில் அந்தக் காலப்பகுதியில் பிரதிவாதியான கோட்டாபய வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் வழக்கை ஜூன் மாதம் 19 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன் அன்றைய தினம் சாட்சியாளர்கள் நால்வரையும் நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

டீஎ.ராஜபக்ஷநினைவுத்தூபிமற்றும்நூதனசாலை அமைப்பதற்கு 9 கோடி ரூபா அரச நிதியைப் பயன்படுத்தினார் எனக் கோட்டாபய உள்ளிட்ட 07 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

ஸ்டாலினுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பினார் சித்தார்த்தன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 25

மக்களவை தேர்தலில் தமிழகத்தில் அமோக வெற்றிபெற்ற திராவிட முன்னேற்றக்கழகத்திற்கும், மு.க.ஸ்டாலினுக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங் காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன்.

அவர் அனுப்பிய கடிதத்தில் –

மக்களவைத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக்கழகக் கட்சிக்கும், வெற்றிக்கு அடித்தளமிட்ட கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும் எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் ஈழத்தமிழர்களின் துயர் துடைக்க முழுமையாக உழைத்த கலைஞரின் வழிநின்று செயலாற்றி வரும் கட்சியும், அதன் தலைவரும் தொடர்ந்தும் எங்கள் மக்களின் துயர் துடைக்க முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டுமென உரிமையுடன் எதிர்பார்க்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

93 கிலோ கஞ்சா மன்னாரில் மீட்பு!

மன்னார், மே 25

மன்னார் – மதவாச்சி பிரதான வீதி, திருக்கேதீஸ்வரம் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் நேற்று முன் தினம் தனியார் பஸ் ஒன்றில் இருந்து ஒரு தொகுதி கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன. பஸ்ஸின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

மன்னார் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடைப்படையில் விரைந்து செயல்பட்ட பொலிஸார் திருக்கேதீஸ்வரம் எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்றைச் சோதனைக்கு உட்படுத்தியபோது, அந்த பஸ்ஸின் பின் ஆசனப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 93 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகளை மீட்டுள்ளதோடு,பஸ்ஸின் உரிமையாளரான நானாட்டான் கிராமத்தைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இந்தக் கேரளக் கஞ்சா பொதிகள் சுமார் 93 இலட்சம் ரூபா பெறுமதியானவை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

முஸ்லிம் ஆசிரியருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

அம்பலாந்தோட்டை – மல்பெத்தாவ மஹா வித்தியாலயத்தில் பணியாற்றிவரும் முஸ்லிம் ஆசிரியரை இடமாற்றுமாறுகோரிஅந்தப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று முன் தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாந்தோட்டை வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம் பெற்றது.

பாடசாலைக்கு வரும் மாணவர்கள், ஆசிரியர்கள், பொலிஸ் உத்தியோகஸ்தர்கள்என அனைவரும்பெற்றோர் பாதுகாப்புக் குழுக்களினால் பாடசாலை வாயிலுக்கு முன்னால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்ற போதிலும், மேற்படி ஆசிரியர் தன்னைப் பரிசோதிக்கவேண்டாமெனக் கூறுகிறார் என்றும், தன்னைச் சோதனை செய்ய இடமளிப்பதில்லை என்றும் பெற்றோர் குற்றஞ்சாட்டினர்.

சஹ்ரானின் சகா கைது!

கொழும்பு, மே 25

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரானுடன் நெருக்கமான உறவைப் பேணினார் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன் தினம் ஒருவர் கைதானார்.

பாணந்துறையைச்சேர்ந்த கைதானவர் முச்சக்கர வண்டிச் சாரதியாவார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்அவர் கைதானார். அவரிடமிருந்து பல சிம் அட்டைகள், தொலைபேசிகள் போன்றன கைப்பற்றப் பட்டன. (ஐ)

தற்பாதுகாப்புக்காகவேதான் பள்ளிவாசல்களில் வாள்கள்!

அதாவுல்லாவின் விளக்கம் இது

கொழும்பு, மே 25

தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவே பள்ளிவாசல்களில் வாள் உள்ளதாக தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாஹ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தற்போதைய சூழ் நிலையில் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அளுத்கம முஸ்லிம்கள் மீது வன்முறை நடத்தப்பட்டபோது அரசிலிருந்து விலகப் போகிறோம், ஆட்சியை மாற்றப் போகிறோம் என்று முஸ்லிம் தலைவர்கள் கூறியதோடு அடுத்த தேர்தலில் வாக்குகளையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஆனால் இப்போது அந்த முஸ்லிம் தலைவர்கள் பூனையை விடவும் மோசமாக உள்ளார்கள். இருந்த உரிமைகளை விடவும் மேலதிகமான உரிமைகளை முஸ்லிம் மக்களுக்குப் பெற்றுத் தருவதாகக் கூறி முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்ற முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்கள் இப்போது முஸ்லிம்களுக்கு இருந்த மத உரிமைகளையும் இல்லாமலாக்கி விட்டார்கள்.

பள்ளிவாசல்களில் வாள்கள் எதற்காக இருக்கின்றன என்றால் சரியாகப் பதிலளிக்க முடியாமல் திணறுகிறார்கள். புல்வெட்டுவதற்கு என்கிறார்கள். அவர்களால் தைரியமாக அதற்கு பதிலளிக்க முடியாது. என்னால் மட்டுமே இவர்களுக்கு தைரியமாக பதிலளிக்க முடியும்.

பிரதமர் ரணிலுடன் இணைந்து அளுத்கம முதல் திகன, அம்பாறை வரை பள்ளிவாசல்களை உடைத்து, அங்கு தொழுத மக்களை கஷ்டப்படுத்தினீர்களே அப்போது எங்களைத் தற்பாதுகாத்துக் கொள்ள வாளைத் தவிர என்ன எங்களிடம் இருக்கிறது என கேட்கிறேன்?

இப்படி தைரியமாகக் கேட்க எந்தத் தலைவனுக்கும் தைரியமில்லை. அவர்களின் அட்டூழியங்களை நாங்கள் எதிர்கொள்ள வாளுமில்லாமல் எப்படி இருக்கமுடியும்? எங்களிடம் வெடிபொருள் இருந்தால் சொல்லுங்கள். மக்கள் நாங்கள் இஸ்லாத்திலா இருக்கிறோம் எனச் சந்தேகிக்கும் அளவுக்கு அஞ்சி ஒடுங்கிப்போயுள்ளனர்.

மேலும் மற்றுமொருவர் இருக்கிறார். அவருடைய சொத்துகுவிப்பு, கடத்தல், மற்றும் வேறு பல விடயங்கள் இருக்கின்றன. அதை சர்வதேசமே நன்றாக அறிந்து வைத்திருக்கிறது. அவருடைய அமைச்சு முஸ்லிம் சமூகத்துக்குத் தேவையான அமைச்சா? அது அரசியல் அநாதைகளுக்குத் தவிசாளர் பதவி கொடுப்பதற்கும் வியாபாரம் செய்வதற்குமான அமைச்சு. எனவே அவ்வாறு முஸ்லிம் மக்களுக்குப் பயன்படாத அமைச்சுப் பதவியை ரிஷாத் பதியுதீன் துறக்க வேண்டும் – என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir

தனி ஒரு வீரரால் மட்டும் உலகக் கிண்ணத்தை வென்றுவிட முடியாது



தனி ஒரு வீரரால்மட்டுமேஉலகக்கிண்ணத்தை வென்றுதந்துவிட முடியாதுஆகவே அனைத்து வீரர்களும்ஒத்துழைப்பைத் தந்தால் இந்தியா அணி உலகக்கிண்ண தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள்ஜாம்பவான் சச்சின்டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண தொடர் ஆரம்பமாவதற்கு இன்னமும் ஒரு வாரம் மட்டுமே உள்ள நிலையில், இத்தொடர் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

தனி ஒரு வீரரால் மட்டுமே உலகக் கிண்ணத்தை வென்று தந்துவிட முடியாது. ஒட்டுமொத்தஅணியினரும்உழைப்பைத்தரவேண்டும். அனைத்து வீரர்களின் ஒத்துழைப்பும் இல்லாமல் ஒன்றும் செய்துவிட முடியாது.

நமது அணியில் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். நம்மால்அதிகஓட்டங்களைகுவிக்க முடியும். துடுப்பாட்ட வரிசையில் 4, 6, 8 ஆகிய இடங்கள்பிரச்சினையாகஎனக்குப்படவில்லை. சூழ்நிலையைப் பொறுத்து வீரரை மாற்றி இந்த இடங்களில் களமிறக்கலாம்.

ஒரு அணிக்கு மட்டும் இரண்டு புதிய பந்துகளை அளிப்பது, ஆடுகளம் சமதளமாக இருப்பது போன்றவை பந்துவீச்சாளர்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்தும். ஒரு அணி 350 இற்கும் மேல் ஓட்டங்களை குவிக்கும்.

எதிரணி 45 ஓவர்களுக்கும் சுருண்டுவிடும். ஒரு நாள் போட்டிகளில் பந்து ரிவர்ஸ் ஸ்விங் ஆவதே இல்லை.

நாங்கள் விளையாடும்போதெல்லாம் 28 மற்றும் 30ஆவது ஓவரில் பந்து ரிவர்ஸ் ஸ்விங் ஆகும். சிலஅணிகள்முன்பேரிவர்ஸ்ஸ்விங்கை பயன்படுத்தி வந்தது. துடுப்பாட்ட வீரர்களுக்கு இந்த வகை பந்துவீச்சுகளை எதிர்கொள்வது சவாலாக இருந்தது. ஆனால், இன்றைய காலகட்டத்தில் பந்து கடினமாக இருக்கிறது. துடுப்பாட்ட வீரர்கள் எளிதாக அடித்து விளையாடுகின்றனர்.

பந்துவீச்சாளர்களுக்கு உதவும் வகையில் விதிகளில் ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். குல்தீப் யாதவ், யுவேந்திர சாஹல் என இரண்டு சுழல் மன்னர்கள் இந்திய அணியில் உள்ளனர்.

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற் கொண்டிருந்தபோது, ஆஸ்ரேலிய வீரர்கள் இவர்கள் இருவரும் குறித்து நன்கு அறிந்து கொண்டனர். நமது சுழற்பந்து வீச்சாளர்களின் பங்களிப்பு உலகக் கிண்ண தொடரில் பாராட்டும் வகையில் இருக்கும். ஹார்திக் பாண்ட்யா, ஜஸ்ப்ரீட் பும்ரா, கே.எல்.ராகுல் உள்ளிட்ட சிறந்த வீரர்களுடன் இந்திய அணி வலுவாகத் திகழ்கிறது–என்றார். ஐ

உலகக் கிண்ணத்தின் தூதுவராக மஹேல!

உலகக்கிண்ண வரலாற்றில் முன்னணி நட்சத்திர வீரர்களாக வலம் வந்த 12 முன்னாள் தலைவர்கள் மற்றும் வீரர்களை இம்முறை உலகக் கிண்ணத் தொடரின் சிறப்பு தூதுவர்களாக நியமிக்க சர்வதேச கிரிக்கெட் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதில், இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல

ஜயவர்தன முதல்முறையாக உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் சிறப்பு தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ண தொடர் எதிர்வரும் 30ஆம்திகதி இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் ஆரம்பமாகவுள்ள நிலையில், கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்தில் சுமார் 20 வருடங்களுக்குப்பிறகு உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளமையால் அதற்காக விசேட நிகழ்ச்சிகள் மற்றும் புதிய அம்சங்கள் உள்ளிட்ட பல முக்கிய விடயங்களை ஐ.சி.சியும், இங்கிலாந்து கிரிக்கெட் சபையும் முன்னெடுத்து வருகின்றன.

இம்முறை உலகக்கிண்ணத்தில் கிரிக்கெட் விளையாட்டின் வரலாறு, மகத்துவம், முன்னேற்றப் பாதை, அண்மைக்கால மாற்றங்கள் உள்ளிட்டமுக்கிய விடயங்களை முழு உலகுக்கும் எடுத்துச் செல்லும் வகையில் 12 முன்னாள் வீரர்களை உலகக் கிண்ணத் தூதுவர்களாக நியமிக்க ஐ.சி.சி நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் குழுவில் கிரிக்கெட் உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய முன்னாள் அணித் தலைவர்களும், கடந்த கால உலகக் கிண்ணப் போட்டிகளில் பிரகாசித்த முன்னாள் வீரர்களும் இடம்பிடித்துள்ளமை சிறப்பம்சமாகும்.

என்னைக் கண்டு அச்சம்

கமெராவுக்கு முன்னால் என் மீது பயமில்லை என்பவர்கள், கமெராவுக்குப் பின்னால் என் மீதான அச்சத்தை வெளிப்படுத்துவார்கள் என மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய இணையத்

தளமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

என் தலைக்கு இளைய வீரர்கள் குறிவைக்கிறார்கள். முன்பு போலஅவர்களைஎதிர்கொள்வது சுலபமல்ல. முன்பு நான் துடிப்புடன் இருந்தேன். ஆனாலும் என்னைக் கண்டு அவர்கள் பயப்படவே செய்வார்கள்.

யுனிவர்ஸ் போஸால் என்ன செய்யமுடியும்என்பதைஅவர்கள் அறிவார்கள். கிரிக்கெட் உலகில் அவர்கள்சந்தித்தமிகஆபத்தான கிரிக்கெட் வீரர் நான் தான் என்பதைக் கவனத்தில் கொள்வார்கள். நான் இதை விரும்புகிறேன். பந்துவீச்சாளர்களுக்கு எதிரான மோதலை மிகவும் விரும்புகிறேன். சவால் இருக்கும்போது அது கூடுதல் சக்தியை அளிக்கிறது.

பந்துவீச்சாளர்களிடம்சென்று என்னைப் பற்றி கேளுங்கள். கமரா முன்னால், என்னைக் கண்டுபயம்இல்லைஎன்பார்கள். கமராவுக்குப் பின்னால் சென்று கேளுங்கள். என்னைப் பற்றிய பயத்தை வெளிப்படுத்துவார்கள்–என கூறினார்.

இதேவேளை மேற்கிந்திய தீவுகள் அணியின் அனுபவ வீரரானகிறிஸ்கெய்ல், எதிர்வரும் உலகக்கிண்ண தொடரில் அணியின் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். ஐ



சிறந்த வீரராக ரொனால்டோ

ஒவ்வொரு நாடுகளிலும் நடைபெறும் முன்னணி உதைபந்து கழகங்களுக்கிடையிலான உதைபந்துத் தொடர்கள், தற்போது முடியும் தறுவாயில் உள்ளன.

இதில் இத்தாலியில் நடைபெறும் முக்கிய உதைபந்து தொடரான செர்ரி ஏ தொடரில் இன்னமும் ஒரு லீக் போட்டி மீதமுள்ள நிலையில், இந்த தொடருக்கான சிறந்த உதைபந்து வீரர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த தொடரில் சிறப்பாக விளையாடிய வீரருக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்படுவது வழக்கம். அந்த வகையில் தற்போது அந்த சிறந்த வீரருக்கான விருதை ஜுவான்டஸ் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ வென்றுள்ளார்.

கடந்த ஆண்டு அணியில் இணைந்த அவர், 30 போட்டிகளில் விளையாடி 21 கோல்கள் அடித்துள்ளார்.

ரொனால்டோ, 8 முறை சக வீரர்களுக்கு கோல் அடிக்க உதவி உள்ளார். இவரின் பங்களிப்பு கைகொடுக்க, ஜுவான்டஸ் அணி கிண்ணத்தை வென்றது.

இதற்கு முன்னதாக ஸ்பெயினின் முன்னணி கழக அணியான ரியல் மட்ரிட் அணிக்காக 9 ஆண்டுகளாக விளையாடி வந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ, கடந்த ஆண்டு இத்தாலியின் பிரபலமான கழக அணியான ஜுவான்டஸ் அணிக்காக சுமார் 100 மில்லியனுக்கு 4 ஆண்டுகளுக்கு ரொனால்டோ, ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

இதன் மூலம், இங்கிலாந்து, ஸ்பெயின் மற்றும் இத்தாலி என மூன்று நாடுகளிலும் உள்ளூர் உதைபந்து தொடரில் சிறந்த வீரர் விருதை வென்ற வீரர் என்ற மகத்தான சாதனையை ரொனால்டோ பதிவு செய்துள்ளார்.

செர்ரி ஏ உதைபந்து தொடரில் விளையாடிய முதல் வருடத்திலேயே, இந்த விருதை வென்று தன்னுடைய இரசிகர்களை ரொனால்டோ கொண்டாட வைத்துள்ளார்.

34 வயதான போர்த்துகலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ, கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து அந்த அணிக்காக 85 போட்டிகளில் விளையாடி 156 கோல்களை அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சகிப் அல் ஹசன் முதல் இடத்தில்!

ஒருநாள் போட்டிகளுக்கான சகல துறை வீரர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

சிறப்பாக விளையாடும் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை ஒவ்வொரு தொடரின் பின்னரும், சர்வதேச கிரிக்கெட் சபை அறிவிப்பது வழக்கம்.

அந்தவகையில்தற்போதுஉலகக் கிண்ணத் தொடரும் நெருங்கி வருவதால், ஒருநாள் போட்டிகளுக்கான சகலதுறை வீரர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இந்த தரவரிசைப் பட்டியலில், பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் சகிப் அல் ஹசன் 359 மதிப்பீட்டு புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

இவரையடுத்து, ஆப்கானிஸ்தான் அணியின் ரஷீத் கான் 339 மதிப்பீட்டு புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

மற்றொரு ஆப்கானிஸ்தான் வீரரான மொஹமட் நபி, 319 மதிப்பீட்டு புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், பாகிஸ்தான் அணியின் இமாட் வசிம் 289 மதிப்பீட்டு புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், நியூஸிலாந்தின் மிட்செல் சான்ட்னர் 279 மதிப்பீட்டு புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

இதனைதொடர்ந்து, இங்கிலாந்தின் கிறிஸ் வோக்ஸ் 271 மதிப்பீட்டு புள்ளிகளுடன் ஆறாவது இடத்திலும், பாகிஸ்தானின் மொஹமட் ஹபீஸ் 266 மதிப்பீட்டு புள்ளிகளுடன் ஏழாவது இடத்திலும் உள்ளனர்.

மேற்கிந்திய தீவுகளின் ஜேஸன் ஹோல்டர், 264 மதிப்பீட்டு புள்ளிகளுடன் எட்டாவது இடத்திலும், சிம்பாப்வேயின் சிகண்டர் ராஸா 261 மதிப்பீட்டு புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்திலும், இலங்கையின் அஞ்சலோ மத்தியூஸ் 255 மதிப்பீட்டுபுள்ளிகளுடன் பத்தாவது இடத்திலும் உள்ளனர்.

இதேவேளை ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசைப் பட்டியலில், இந்தியாவின் விராட் கோஹ்லி முதலிடத்தில் உள்ளார்.

பந்து வீச்சு தரவரிசைப் பட்டியலில், இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா முதலிடத்தில் உள்ளார்.

ஒருநாள் அணிகளின் தரவரிசைப் பட்டியலில், இங்கிலாந்து அணி 125 மதிப்பீட்டு புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. ஐ

ஞானசாரரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அவசரகாலச் சட்டத்தால் தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். தென்னிலங்கையை விட மிகவும் கடுமையான நடவடிக்கைகள் வடக்கில் மேற்கொள்ளப்பட்டன. இராணுவம் எங்கள் மாணவர்கள், அவர்களது புத்தகப் பைகளைச் சோதனையிடும்போது அவர்களின் மனநிலை எப்படி இருக்கும்? இப்போதுள்ள தொழிநுட்ப வசதிகளை கொண்டு மாணவர்கள் ஐ.எஸ். எல்லாம் பற்றித் தேடினால் அவர்களின் சிந்தனை என்னவாகும்? இதையெல்லாம் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும்.

இன்று ஞானசார தேரரை விடுதலை செய்ய உங்களால் முடியுமாயின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்துவைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை ஏன் விடுதலை செய்யமுடியாது?

இன்று இவர்களின் விடுதலைக்காகச் சட்டத்தரணிகளை நியமித்து வாதாட முடியாத நிலையில் கூட பலர் உள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும் .

இந்தப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகள் தள்ளிவைக்கப்பட்டுள்ளன. இராணுவ நிலை கொள்ளல் தொடர்கிறது. இதனால் இப்படியான சட்டங்களுக்கு எதிர்ப்பை தெரிவிக்கவேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம் – என்றார். (ஐ)

அவசரகாலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்பின்போது சபையில் இருந்த ஆளுங்கட்சியின் 19 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 3 உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை, நேற்றைய சபை அமர்வில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்தனர்.

நாடாளுமன்றம் மீண்டும் ஜூன் மாதம் 4ஆம் திகதி கூடவுள்ளது.

இதேவேளை, அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. நேற்றுக் காலை நடந்த நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் இந்த முடிவெடுக்கப்பட்டது.

அவசரகாலச்சட்டம்தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படியான முடிவை எடுப்பதென நேற்று முன் தினம் ஆராய்ந்தது. எனினும், நேற்று முன் தினம் முடிவெடுக்க முடியாத நிலையில், நேற்று மீளவும் கூட்டம் இடம்பெற்றது.

நேற்றுக் காலையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடந்தது. நேற்றும், இரா.சம்பந்தன் கலந்துகொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான எம்.பிக்கள், அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதென்பதில் முடிவாக இருந்தனர்.

இதனால் பெரும்பாலான உறுப்பினர்களின் அப்பிராயப்படி,நேற்று அவசரகாலச்சட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதென தமிழ் தேசிய கூட்டமைப்பு முடிவு செய்தது. (ஐ)

பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டுத் தூதுவர்களை நேற்று அலரி மாளிகையில் சந்தித்துக் கோரிக்கை விடுத்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நாட்டின் நிலைமையை நாங்கள் சீர்ப்படுத்தியுள்ளோம். பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளோம்.அதேசமயம் இலங்கைக்கு விடுக்கப்பட்டுள்ளபயணஎச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைத் தளர்த்துங்கள் என்றும் வெளிநாட்டுதூதுவர்களிடம் கேட்டுக்கொண்டார் ரணில். (ஐ)

முதுகெலும்பற்றது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது. அந்த மருத்துவர் குறித்து விசாரணைகள் நடப்பதாகக் கூறினாலும் நான் இதுபற்றி தேடியபோது அப்படி எந்த விசாரணைகளும் நடப்பதாக தெரியவில்லை.

4000 சிசேரியன் சிகிச்சைகள் ஒரு மருத்துவர் செய்ய வேண்டுமாயின் ஒரு நாளைக்கு ஒரு சிசேரியன் சிகிச்சை என்று பதினோரு வருடம் அவர் செய்திருக்க வெண்டும். இதில் உண்மை இருக்குமா ? அரச மருத்துவ சங்கம் என்ன செய்கிறது? ஏன் மௌனம் காக்கின்றனர்? இப்படியான செய்திகளை வெளியிடும் ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத முதுகெலும்பற்ற நிலையில் தான் எமது அரசு இருக்கிறது – என்றார். (ஐ)

ஈஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார.

ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்டசந்தேகநபர்கள் சிலரின் வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.

குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களின் வங்கிக் கணக்குகளேமுடக்கப்பட்டுள்ளன.

13 கோடி 40 இலட்சம் ரூபா பெறுமதியான 41வங்கிக் கணக்குகளே இவ்வாறு முக்கப்பட்டுள்ளன என்றுபொலிஸ்ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார். (ஐ)

கேப்பாபுலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களத்தினர் பிடித்துள்ளனர்.

கேப்பாபுலவு படைத்தலைமையகக் காணிக்குள் நுழைந்த இரண்டு முதலைகள் அங்கு நின்ற இரண்டு மாடுகளை பிடித்து தின்றுள்ளன.

இது குறித்து படையினரால் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டது.

படைதலைமையகத்துக்குச் சென்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் இரண்டுமுதலைகளையும் பிடித்தனர்.

இரண்டு முதலைகள் நந்திக்கடல் ஏரியில் நின்றுள்ளன. கடும் வெப்பம் காரணமாக இவை தரையை நேக்கி வந்தவேளை படையினரின் முகாமுக்குள் புகுந்துள்ளன. (ஐ)

வறட்சியால் வவுனியாவில் 39 குடும்பங்களுக்கு பாதிப்பு

வவுனியா, மே 25

வவுனியாவில் கடந்த சில மாதங்களாகக் காணப்பட்ட வறட்சி காரணமாக 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் பாதிப்படைந்துள்ளனர் என தேசிய இடர் நிவாரண சேவைகள் நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.தனுராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியாவில் கடந்த மார்ச் மாதம் முதல் ஏற்பட்ட வறட்சி காரணமாக வவுனியா வடக்கு மருதோடை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்ற கிராமமான காஞ்சிராமோட்டை பாதிப்படைந்துள்ளது. இதன் காரணமாக இங்கு வசிக்கும் 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் குடிதண்ணீர் பெறுவதில் இடர்பாடுகளை எதிர்நோக்கி வந்தனர்.

தேசிய இடர் நிவாரண சேவைகள் நிலையத்தின் ஊடாக வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு இந்த மக்களின் குடிதண்ணீர் விநியோகத்துக்காக 78 ஆயிரத்து 500 ரூபா முதல் கட்டமாக வழங்கப்பட்டு கடந்த மார்ச் மாதம் முதல் தொடர்ந்தும் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு நெற்செய்கை மற்றும் மேட்டு நிலப் பயிர்செய்கையில் வறட்சியினால் பாதிப்புக்கள் பெரியளவில் ஏற்படவில்லை – என்றார். (ஐ)

சுவிஸ்குமாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்அதிகாரிகளுக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகைதாக்கல் செய்யப்படவுள்ளதாகச் சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிராகவே இந்தக் குற்றப்பத்திரிகை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அது தொடர்பான ஆவணங்களை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு அனுப்பிவைத்துள்ளதாகச் சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

புங்குடுதீவு மாணவி வித்தியாசிவலோகநாதன்படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியாகக் கூறப்படும் சுவிஸ்குமார் என அழைக்கப்படும்மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை விடுவித்து உதவினார்கள்என்றகுற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் சிரேஷ்டபிரதிப்பொலிஸ் மா அதிபர் லலித்ஜெயசிங்ககைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தலை மறைவாகி உள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறைநீதிவான்நீதிமன்றில்நடைபெற்று சட்ட மா அதிபரின் நடவடிக்கைகக்காக விடப்பட்டது.

இந்த நிலையில் மாணவி படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியை விடுவித்தமை மற்றும் அதற்குஉடந்தையாகஇருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன், வடக்குமாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க ஆகிய இருவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளார்.

அவர்கள் இருவருக்கும் எதிரானஇந்தக்குற்றப்பத்திரிகையில் 26 சாட்சிகளையும் சட்ட மா அதிபர் இணைத்துள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன், 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி படுகொலைசெய்யப்பட்டார். மறுநாள் அவரது சடலம் பற்றைக் காணிக்குள் எடுக்கப்பட்டது.

இந்த நிலையில் வழக்கின் சந்தேகநபர்களைப் பொலிஸாரும் பொதுமக்களும் பிடித்தனர். சுவிஸ்குமார் என்று அழைக்கப்படும்மகாலிங்கம்சசிக்குமார்என் பவரையும் ஊர் மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவரையாழ்ப்பாணம்அழைத்து வந்த உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன், அன்றைய தினம் இரவு பொலிஸ் காவலிலிருந்து அவரை விடுவித்தார். அவர் பின்னர் கைதானார்.

இந்த நிலையில் மாணவி படுகொலைவழக்குயாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத் தீர்ப்பாயம் ட்ரயல் அட் பார்) முன்னிலையில் இடம்பெற்றது. மேல் நீதிமன்ற நீதிபதிகள் பாலேந்திரன் சசிமகேந்திரன், அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு இடம் பெற்று சுவிஸ் குமார் உள்ளிட்ட 7 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதனையடுத்தே சுவிஸ் குமாரைத் தப்பிக்கவைத்த குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் ஆகியோருக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ஐ)

தீவிரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரியமுல்லையில் அமைந்துள்ளபெரியபள்ளிவாசலின்முன்பாக இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் ஜும்மா மஸ்ஜித் வீதி வழியாக நீர்கொழும்பு –சிலாபம்பிரதானவீதியில்அமைந்துள்ள யூஸுபியா பள்ளிவாசல் வரை பேரணியாகவந்து, பிரதான வீதியோரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புக்கு எதிராகவும், தேசிய தௌஹீத் ஜமாத்தினால் நடத்தப்பட்டதற்கொலைத்தாக்குதலுக்கு எதிராகவும், குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மரணித்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தமையுடன் எதிர்ப்புக் கோசங்களையும் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், நீர்கொழும்பு நகரின் பல பிரதேசங்களிலிருந்தும்வந்தமுஸ்லிம்கள் கலந்துக் கொண்டனர். (ஐ)

யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனைக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் எம்.பியுமானடக்ளஸ்தேவானந்தா சுட்டிக்காட்டியதையடுத்து உடனடியாக அதனைக் கவனிக்குமாறு இராணுவத் தளபதியைப் பணித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஜனாதிபதி ,பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன்நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் வடக்கின் பாதுகாப்பு நிலைமை குறித்துவிளக்கிய டக்ளஸ்எம்.பி., தேவையற்ற கெடுபிடிகள் மக்கள் மத்தியில் அச்சத்தை உண்டுபண்ணும் நிலைமை இருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

குடு மற்றும் கடு தான் இப்போது குடாநாட்டின் பிரச்சினை (குடு – போதைப்பொருள், கடு – வாள்). அங்கு தேவையற்ற கெடுபிடிகளை செய்யாதீர்கள் என்று டக்ளஸ் எம் பி கூறியதையடுத்து அது குறித்து கவனிக்குமாறு உடனடியாக இராணுவத் தளபதியைப் பணித்தார் ஜனாதிபதி.

இந்தக் கூட்டம் முடிந்த கையோடு இராணுவத் தளபதியின் அறிவுறுத்தல் யாழ்ப்பாணக் கட்டளைத்தளபதிக்குச்சென்றது. இதனையடுத்து டக்ளஸ் எம்.பியைத் தொலைபேசியூடாக தொடர்புகொண்டயாழ். கட்டளைத் தளபதிஹெட்டியாராச்சி, குடாநாட்டில் பெரும்பாலான இடங்களில் பாதுகாப்புப் படையினர் மக்கள் பாதிக்காத வகையில் செயற்படுகிறார்கள் என்று, ஆனாலும் ஏதும் அநாவசியச் செயற்பாடுகள் நடைபெறுமாயின் தமது கவனத்துக்குக் கொண்டுவருமாறும் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவில் கடற்படைக் கெடுபிடிகள் இருப்பதாகவும் படையினரும் மக்களிடம் கெடுபிடிகளை விதித்து நடக்கக் கூடாதென்றும் யாழ். கட்டளைத்தளபதியிடம் டக்ளஸ் எம்.பி. கூறினார் என அறியமுடிந்தது. (ஐ)

வன்முறை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குமாகாணப்பிரதிபொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வடக்குமாகாணப்பிரதிபொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றி வந்த அவர் தென் மாகாணத்துக்கு இடமாற்றம் பெற்று செல்லவுள்ளார். இந்நிலையில் காங்கேசன்துறையில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து கருத்துகளைப் பகிரும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணம் போருக்குப் பின்னர் அமைதியாக இருந்தது. பின்னர் சில இளைஞர்கள் குழுக்களாக இணைந்து வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தனர். அவ்வாறான இளைஞர் குழுக்களுக்கு ஒவ்வொரு பெயர்களும் இருந்தன. இதனால் வடக்கில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுச் சம்பவங்கள் அரங்கேறின.

இந்தக் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த பல பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டன . அவர்கள் வன்முறையில்ஈடுப– அதற்கு உதவிய நபர்களைக் கைது செய்தனர். எனினும்அவர்களுக்கு எதிராகச்சாட்சியம்அளிக்கயாரும் வருவதில்லை. அதனால் வெளியில் வந்து விடுகின்றனர். அவ்வாறு வருபவர்கள் தாம் இனி மேல் இவ்வாறான வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபடமாட்டோம் என உறுதியளித்துள்ளனர். அத்துடன்அவர்கள்திருந்திவாழ்ந்தும் வருகின்றனர்–என்றார். (ஐ–07)

காவிந்தவுக்கு பதிலாக ராஜித

கொழும்பு, மே 25

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக நியமிக்கப் பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து, காவிந்த ஜயவர்தன எம்.பி. விலகியமையைத் தொடர்ந்து, அந்த வெற்றிடத்துக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட காரணத்துக்காகவே, தான் அந்தத் தெரிவுக்குழுவிலிருந்து விலகுகிறார் என காவிந்த எம்.பி. தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அந்த இடத்துக்கு ராஜித நியமிக்கப்பட்டுள்ளமையுடன் தெரிவுக் குழுவின் மேலதிக உறுப்பினராக மக்கள் விடுதலை முன்னணியின் நலிந்த ஜயதிஸ்ஸ எம்.பியையும் நியமிக்கின்றார் என சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று அறிவித்தார். (ஜ)

வயோதிபப் பெண் விபத்தில் மரணம்

கொழும்பு, மே 25

ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியின் ஹற்றன் நகரின் மக்கள் வங்கிக்கு அருகாமையில் கனரக வாகனம் ஒன்றில் சிக்குண்டு வயோதிபப் பெண் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று வெள்ளிக் கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் வீதியை கடக்க முயற்சித்த வயோதிபப் பெண் பொகவந்தலாவ பகுதியில் இருந்து ஹற்றன் குடாகம பகுதிக்குச் சென்ற கனரக வாகனத்தில் முன் சில்லில் சிக்குண்டு பலியானார்.

வாகனச் சாரதியின் கவனயீனம் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாகவும், அந்தச் சாரதியை கைது செய்துள்ளதாகவும், ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ)

பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புள்ள மேலும் ஐவர் கைது!

கொழும்பு, மே 25

பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடைய மேலும் 5 பேர் நேற்று அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஐவரும் ஹொரவப்பொத்தனைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

அவர்கள் தற்கொலைத் தாக்குதல்களுடன் நேரடித்தொடர்புகொண்டவர்கள் என்று சந்தேகம் எழுந்துள்ளதாகவும், இவர்கள் புலனாய்வுப் பிரிவுகளால் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்தே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

இவர்கள், அநுராதபுரம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் பல இடங்களில், முஸ்லிம் பிரிவினைவாதம் தொடர்பான பிரசங்கங்களை நடத்தியுள்ளார்கள் எனக் கூறப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுடன் தொடர்புபட்டு, தற்போது வெளிநாடொன்றில் தங்கியிருக்கும் பிரதான சந்தேகநபரொருவருடன் இவர்கள் நெருங்கிய தொடர்புகளைப் பேணியுள்ளார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு அவரிடமிருந்து இலட்சக்கணக்கான பணத்தை இவர்கள் பெற்றுள்ளார்கள் என்றும் விசாரணைகள் மூலம் தெரியவந்ததாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

பாப்பரசரின் பிரதிநிதியை சந்தித்தார் பிரதமர் ரணில்!



கொழும்பு, மே 25

இலங்கை வந்துள்ள பாப்பரசரின் பிரதிநிதி கர்தினால் பினினோவை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசினார்.

பௌத்தலோக மாவத்தையிலுள்ள வத்திக்கான் தூதுவராலயத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு நடந்தது. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றார்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம் பெற்ற குண்டுத் தாக்குதலினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பிரதமர் ரணில் பாப்பரசரின் பிரதிநிதிக்கு எடுத்துரைத்தார். (ஜ)

பாடசாலைக்கு அருகில் 13 கைக்குண்டுகள் மீட்பு!

கொழும்பு, மே 25

களுத்துறை, பதுரலிய பாடசாலைக் கட்டடம் ஒன்றின் அருகே பார்சல் ஒன்றில் கிடந்த 13 கைக்குண்டுகளை மீட்ட பொலிஸார் அது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலைக் காவலாளி வழங்கிய தகவல் ஒன்றையடுத்து பதுரலிய பொலிஸார் இவற்றை மீட்டனர்.

இதேவேளை, "களுத்துறை மாவட்ட பதுரலிய பாடசாலை வளவுக்குள் 13 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இது பாரதூரமானது. இவை எப்படி வந்தன? இவற்றைக் கொண்டுவந்து போட்டவர்கள் யார் ? அரசு இதன் உண்மைத்தன்மையை அறிவிக்கவேண்டும். நாட்டு மக்கள் பாதுகாப்பு குறித்து யோசித்துக் கொண்டிருக்கும்போது இப்படி குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டமை சாதாரண விடயம் அல்ல. அரசு இந்த சபையில் அதன் உண்மைத்தன்மையை இன்று சொல்ல வேண்டும்" – என நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தினேஷ் குணவர்தன எம்.பி. குறிப்பிட்டார். (ஜ)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

25.04.2019 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயார்

அமரர்

விக்கினேஸ்வரி வாசேஸ்பதிராஜா

எங்கள் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆருயிர் அன்னையே
அவனியில் அரவணைப்பு இன்றித் தவிக்கின்றோம்!

நீர் தந்த அன்பின் நிழலில்
என்றும் உம் நினைவுடன்
தொடரும் எம் வாழ்க்கை...

பிறப்பு
22.06.1946

இறப்பு
25.04.2019

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 25.05.2019 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இல:34/1, தாமரை வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 666 9987 வா.கணேஸ்வரன்
077 959 0065 வா.லோகேஸ்வரன்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 25.05.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.